ORIENTAL MANUSCRIPTS LIBRARY

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கஉ.] ஆனந்த வருஷம் ஆடி மீ [பகுதி-கூ.
Vol. XII. July—August. 1914. No. 9.

## சம்பந்தமூர்த்திகள்காலம்.

:(o):

இவ்வருடம் வைகாசிமாசத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையில் ஸ்ரீமத் T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்களால் எழுதப்பட்ட திருவிளையாடற் புராணம் 64-வதுபடல ஆராய்ச்சியில், சம்பந்தமூர்த்திகள்காலம் ஒருவாறுநிரூபிக்கப்பட்டது. அதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட ஏதுக்களுள்ளே விருத்தப்பாவுமொன்றும்.

விருத்தப்பா, மூன்றுஞ்சங்கத்துக்குப்பின்வந்தபாவாதலின் அப்பாவைத் தமதுதேவாரத்தில்வைத்த சம்பந்தரதுகாலமும், அச்சங்கத்துக்குப்பின்னருள்ளதேயாகற்பாலதென்பது பண்டாரத்தாரவர்கள் துணிபு.

தமிழ், இயல் இசை நாடகமென முத்திறப்படும். முத்தமிழுக்கும் இலக்கணங்களும் தனித்தனியுள்ளன. முத்தமிழிலும் பாவும் பாவிலக்கணமு முள. இயற்றமிழுக்குச் செய்யுளிலக்கணம்வேறு. இசைத்தமிழுக்குச்செய்யுளிலக்கணம்வேறு. நாடகத்தமிழுக்கும்வேறு. இவ்விலக்கணமெல்லா மொருங்கேகற்றார் இக்காலத்திலராயினும் அவைமூன்றும் வேறுவேறென்பது இயற்றமிழிலக்கணங்கற்றாரியாவருமறிவர்.

சீவகசிந்தாமணிசெய்யப்பட்டகாலத்திலே தொல்காப்பியமும் அகத்தியமுமே அதற்கு இலக்கணமாமென்பதும், அந்நூல்களிற்கூறப்பட்ட இலக்கணமுடையசெய்யுளாற்செய்யப்பட்டதே சீவகசிந்தாமணியென்பதும், அதில்வருஞ்செய்யுட்கள் கொச்சகத்திலடங்குமென்பதும் அந்நூற்கு நச்சினார்க்கினியர் எழுதியவுரையாற் றெள்ளிதிற்பெறப்படும். அங்ஙனமாகவும், சீவகசிந்தாமணிச்செய்யுட்களை விருத்தப்பாவாகக்கொண்டுமயங்குவார் பலர்.

இசைத்தமிழ்ப்பாக்களெல்லாம் பண்ணோடிசைந்தவை. அவை பண்ணின்றி ஓதப்போகா. சம்பந்தர்பாடியதேவாரமெல்லாம் இசைப் பாக்களே. அவை பண்ணின்றியோதப்போகாமையே அதற்குப் பிரமாணமாம். அதுவுமன்றி ஒவ்வொருபதிகமும் ஒவ்வொருபண்ணை யுடையனவாயிருத்தலும் பிரத்தியக்ஷமாம். ஆதலின், சம்பந்தருடைய தேவாரத்திலுள்ளபாக்களெல்லாம், இசைப்பாக்களேயன்றி இயற் றமிழ்ப்பாக்களல்ல. இவ்வுண்மை,

"மாதொர்கூறனைவலஞ்சுழிமருவியமருந்தினைவயற்காழி
நாதன்வேதியன்ஞானசம்பந்தன்வாய்நவிற்றியதமிழ்மாலை
யாதரித்திசைகற்றுவல்லார்சொல்லக்கேட்டுகந்தவர்தம்மை
வாதியாவினைமறுமைக்குமிம்மைக்கும்வருத்தம்வந்தடையாவே."

என்னுந் திருவாக்காற் றுணியப்படும். இசைத்தமிழ்ப்பாவாதலின் அஃதோதத்தக்கவதிகாரிகள் இசைகற்றுவல்லாரே என்பது இதனாற் பெறப்படும்.

இன்னும், இசைத்தமிழிலே கட்டளைக்கலித்துறையாகக்கொள் ளத்தக்கபாக்களு முள.

"செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்ப
நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான்
கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே."

இது, பிற்காலத்தார் இயற்றமிழ்ப்பாக்களுளொன்றாக விதிவகுத் துக்கொண்ட கட்டளைக்கலித்துறையிலடங்குவதாயினும் கட்டளைக் கலித்துறையன்று. அஃது, இசைத்தமிழாகியதேவாரத்தில் விருத்த மெனப்படும். அதற்குப் பண் கொல்லி. இன்னுந் தேவாரத்தில் விருத்தமெனப்படும் இசைப்பாக்கள் அநேகமுள. அவையெல்லாம் தனித்தனி வெவ்வேறுபண்ணுடையன. வேதத்துக்குச் சந்தசுபோலத் தேவாரங்களுக்குச் செவ்வழி கொல்லிமுதலியபண்கள் இன்றியமை யாதன. வேதத்துக்குச் சந்தசு எவ்வாறோ அவ்வாறே தேவாரத்துக் குப் பண் முக்கியாங்கமாம். இன்னும் பண்ணும்வேறு, இராகமும் வேறு என்பதும் நோக்கத்தக்கது.

பெருநாரை பெருங்குருகு என்னுமிசைத்தமிழ்நூல்கள் இடைச் சங்கத்தார்க்குங் கடைச்சங்கத்தார்க்கும் நூல்களாம். அந்நூல்களே இசைத்தமிழாகியதேவாரத்துக்கும் நூல்களாம். இசைப்பா சிந்து, திரிபதை, சவலை, சமபாதவிருத்தம், செந்துறை, வெண்டுறை, தேவபாணி(2) வண்ணம் என ஒன்பதுவகையென அடியார்க்குநல்லார்கூறுவர். (சிலப்பதிகாரம் கடலாடுகாதையிற்காண்க.) இன்னும், "தேவபாணி, இயற்றமிழில்வருங்கால், கொச்சகவொருபோகாய்வரும்" எனவரும் அடியார்க்குநல்லார்கூற்றால் இசைப்பாக்கள் இயற்றமிழிலேவரும் போது வேறுபெயரும் விதியும்பெறுமென்பதும் கொள்ளப்படும்.

இவ்வாற்றால் இசைத்தமிழிலக்கணமும்வேறு இயற்றமிழிலக்கணமும்வேறு என்பது வெள்ளிடைமலை. இவ்வுண்மையையறியாதார் தேவாரத்தில் விருத்தப்பாவருதலால் அது கடைச்சங்கத்துக்குப் பன்னூற்றாண்டுகளுக்குப்பின்னர்ப் பாடப்பட்டதாதல்வேண்டுமெனக் கடைப்பிடிப்பர். விருத்தப்பா இயற்றமிழுக்குரியதன்று. அஃது இசைத் தமிழுக்கேயுரியது. அதனைப் பிற்காலத்தார் இயற்றமிழுக்கும் அமைத்துக்கொண்டனர். அஃது இயற்றமிழுக்குரியதன்றென்பது தொல்காப்பியத்திற்கூறப்படாமையால் நன்குதுணியப்படும். இயற்றமிழ்ப்பாவிலக்கணமும்வேறு இசைத்தமிழ்ப்பாவிலக்கணமும்வேறு என்பது தொல்காப்பியஞ் செய்யுளியல் 243-ஞ்சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியரெழுதியவுரையிற்காண்க.

இதுகாறுங்கூறியவாற்றால், சம்பந்தர்தேவாரத்தில்வரும் விருத்தப்பாக்களெல்லாம் இசைத்தமிழ்ப்பாக்களேயாமென்பதும், அவை இயற்றமிழ்ப்பாக்களல்லவென்பதும், அவைகட்கிலக்கணநூல் இசைநுணுக்கம் பெருநாரை பெருங்குருகுமுதலிய நூல்களென்பதும், மூன்றுஞ்சங்கத்துக்குப் பன்னெடுங்காலத்துக்குப்பின்னர்த்தோன்றிய சின்னூல்கள் அவற்றுக்கிலக்கணமாகாவென்பதும், பெருநாரை பெருங்குருகுமுதலிய இடைச்சங்கத்துக்குங் கடைச்சங்கத்துக்கும் இசையிலக்கணநூலென்பதும், அவை நூலாயிருந்தகாலத்திலேயே சம்பந்தர் பாடினாரென்பதும், பாடியகாலம் இடைச்சங்கத்திறுதியும் கடைச்சங்கத்துமுதலுமாகியகாலமென்பதும், அஃதிற்றைக்கு நாலாயிரம் வருஷத்துக்குமுற்பட்டதென்பதும் துணியப்படும்.

திருஞானசம்பந்தமூர்த்திகளால் வெப்புநோய்தீர்த்தருளப்பட்ட பாண்டியன் முடத்திருமாறன். அவன் கூன்பாண்டியன் எனவும் படுவன். அவன், இடைச்சங்கத்திறுதிக்காலத்திலும் கடைச்சங்கத் துத்தொடக்கத்திலும்விளங்கியவன். இவ்வுண்மை,

"...........பரீஇயசங்கமிரீஇயபாண்டியர்கள்
வெண்டேர்ச்செழியன்முதலாவிறல்கெழு
திண்டேர்க்கொற்றமுடத்திருமாறன்..........." என்றும்,

"...........இடர்ப்படாதிவர்களைச்சங்கமிரீஇயினோர்
முடத்திருமாறன்முதலாவுக்கிரப்
பெருவழுதியீறுப்பிறங்குபாண்டியர்..........."

என்றும் வரும் இடை கடைச்சங்கங்களின்வரலாற்றுச்செய்யுளாற் றுணியப்படும். இஃது இறையனாரகப்பொருளுரையாலும் பெரிய புராணத்தாலும் வலியுறுத்தப்படும். கடைச்சங்கம் நிலைபெற்றகாலம், ஆயிரத்துத்தொளாயிரத்தைம்பதுவருடம். அஃது தழிந்தும் இரண் டாயிரத்தின்மிக்கவருடங் கழிந்தன. இவ்வாறே சம்பந்தர்காலம் நாலாயிரம்வருடங்களுக்குமுற்பட்டதென்பதுகாண்க.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை,
யாழ்ப்பாணம், நாவலர்கோட்டம்.

---

௨

# அதிகமான் நெடுமானஞ்சி.

இவன் கடைச்சங்கநாளில் தமிழகம்புகழவிளங்கிய கடையெழு வள்ளல்களில் ஒருவனென்பது "முரசுகடிப்பிகுப்பவும்" என்னும் 158-ம் புறப்பாட்டாலும், சிறுபாணாற்றுப்படையில் 84 முதல் 122வரை யுள்ள அடிகளாலும் நன்கு விளங்கும். இவனை அதியமான்நெடுமானஞ்சி யெனவும், நெடுமானஞ்சியெனவும், அஞ்சியெனவும், எழினியெனவும் வழங்குவர். இவ்வள்ளலைப்பற்றியசரித்திரமுழுதும் அறியவிடமில்லை யேனும் பழையநல்லிசைப்புலவர்கள் இவன்விஷயமாகப்பாடியுள்ள

செய்யுட்கள் இவன்வரலாற்றைச் சிறிது அறிதற்கு உதவியாயிருத்த லோடு இவனதுபெரியகொடைச்சிறப்பையும், மிகுந்தபோர்வீரத்தை யும் அரியகுணங்களையும் இக்காலத்தார்க்கு நன்குபுலப்படுத்துகின்றன. இவன் [1]மழவர் என்னும் ஒருகூட்டத்தார்க்கு அரசனென்பது "ஓங்கு திற—லொளிறிலங்குநெடுவேன்மழவர்பெருமகன்" (புறம். 88) எனவும், "வழுவில்வண்கைமழவர்பெரும" (புறம். 90) எனவும் புறநானூற்றில் வருதலாற்றெரியலாம். இவன் ஊர் தகடூரென்பதும், மலை குதிரைமலை யென்பதும் 230, 158-ம் புறப்பாடல்களால் முறையே அறியப்படு கின்றன. இவன் வெட்சிப்பூவையும் வேங்கைப்பூவையும் அணிவோன்; இவனுக்குரியமாலை பனைமாலையாகும். (புறம். 99) புறநானூற்றுரை யாசிரியர், "இவனுக்குப் பனந்தார்கூறியது சேரமாற்கு உறவாதலின்" என்று 99-ம் புறப்பாட்டினுரையிற் குறித்திருப்பதனால் இவன் சேரர் களுக்கு உறவினனென்பது அறியக்கிடக்கின்றது. இவன்நகர் வேற் றரசரால்தாக்கமுடியாத அரண்வலியுடையதென்றும், மலைக்கணங்கள் போன்ற மாளிகைகளையுடையதென்றும் கூறுவர்; இதனை,

> "ஆர்வலர்குறுகினல்லதுகாவலர்
> கனவினுங்குறுகாக்கடியுடைவியனகர்
> மலைக்கணத்தன்னமாடஞ்சிலம்ப"

என்னும் அடிகளிற்காண்க.

இவனதுகொடையைச்சிறப்பிப்பதோர்விஷயம் புறநானூற்றிற் காணப்படுகிறது. அஃதாவது:—இவ்வள்ளல் ஒருகாலத்து உண் டோர்க்கு நெடுங்காலம்ஜீவித்திருத்தலைச்செய்யும் அருமைபெருமை வாய்ந்ததோர்நெல்லிக்கனியைப்பெற்று, தானுண்டு நெடுநாள் உயிர் வாழ்ந்திருத்தலைக்காட்டிலும் ஔவையைப்போன்ற நல்லிசைப்புலமை மெல்லியலார் நெடுநாளிருப்பின், தமிழகத்திற்குமிக்கநன்மையெனக் கருதி அவருக்கு அதனை அளித்தனன்.—என்பதாம். இதனை,

[1] இவன்வழித்தோன்றல்களே பிற்காலங்களில் 'மழவராயன்' என்னும் பெயர்புனைந்த சிற்றரசர்களாகவும், மந்திரிகளாகவும், சேனாபதிகளாகவும் சோழசக்கரவர்த்திகளின்கீழ்த் தென்னாடுகளில் இருந்துவந்தனரென்றுதெரி கிறது. தற்காலத்திலும் இப்பெயர்புனைந்தோர்சிலர் தஞ்சை திருச்சிமுதலிய ஜில்லாக்களில்வசிக்கின்றனர். இவர்களெல்லாம் மேலேசொல்லப்பட்டவர்களின் வம்சத்தினர்களென்றே புராதனசரித்திரஆராய்ச்சிசெய்யும் அறிஞர்பலரும் கருதுகிறார்கள்.

"........................தொன்னிலைப்
பெருமலைவிடரகத்தருமிசைக்கொண்ட
சிறியிலைநெல்லித்தீங்கனிகுறியா
தாதனின்னகத்தடக்கிச்
சாதனீங்கவெமக்கீத்தனையே" (புறம். 91)

என ஒளவையாரும்,

"..... ........................மால்வரைக்
கமழ்பூஞ்சாரற்கவினியநெல்லி
யமிழ்துவிளைதீங்கனியௌவைக்கீந்த
வுரவுச்சினங்கனலுமொளிதிதழ்நெடுவே
லரவக்கடற்றானையதிகனும்" (சிறுபாணாற்றுப்படை 99—103)

என இடைக்கழிநாட்டுநல்லூர்நத்தத்தனாரும் கூறுதல்காண்க. அன்றியும், "இனியவுளவாகவின்னாதகூறல்—கனியிருப்பக்காய்கவர்ந்தற்று" என்னும் திருக்குறள்விசேடவுரையில், ஆசிரியர்பரிமேலழகரும் 'இனியகனிகளென்றது ஒளவையுண்டநெல்லிக்கனிபோ லமிழ்தாவன வற்றை' என்று இச்செய்தியைக்குறித்திருக்கின்றனர். 2இவ்வரலாற்றால் இவனதுவள்ளன்மை நன்குபுலப்படும்.

இவன் இரவலர்க்கினியனாய்ப் புரவலர்க்கின்னானாய்நின்றபெருநிலையை ஒளவையார் மிகவும்பாராட்டிக்கூறுவர். இதனை,

"ஊர்க்குறுமாக்கள்வெண்கோடுகழாஅலி
னீர்த்துறைபடியும்பெருங்களிறுபோல
வினியைபெருமவெமக்கேமற்றதன்
றுன்னருங்கடாஅம்போல
வின்னாய்பெருமநின்னொன்னாதோர்க்கே."

எனவரு மினியபாட்டானறிக.

இப்பெருந்தகையைப்பாடியபுலவர்பெருமக்கள், ஒளவையார் பெருஞ்சித்திரனார் பொன்முடியார் பரணர் என்போர்; இவர்களுள்

---

2 "பூங்கமலவாவிசூழ்புல்வேளூர்ப்பூதனையு
மாங்குவருபாற்பெண்ணையாற்றினையு—மீங்கு
மறப்பித்தாய்வாளதிகாவன்கூற்றைநாவை
யுறப்பித்தாயாமல்கந்தந்து" என்னும் 'தமிழ்நாவலர்சரிதை'யிலுள்ள ஒளவையார்பாடலையும் ஈண்டுநோக்குக.

நல்லிசைப்புலமைமெல்லியாருள் ஒருவராகிய ஔவையாரே இவ்வள்ளலது அருமைபெருமைகளை அதிகமாகவெளியிட்டவர். வேள் - பாரிக்குக் கபிலர்போலவும், வேள்-ஆய்க்கு உறையூர் ஏணிச்சேறிமுடமோசியார்போலவும், சேரமான்கணைக்காலிரும்பொறைக்குப் பொய்கையார் போலவும், கோப்பெருஞ்சோழற்குப் பிசிராந்தையார் பொத்தியார் போலவும், அதிகமான்நெடுமானஞ்சிக்கு ஔவையாரே பெரிதும் நட்புரிமைபூண்டவராவர். இவன் றன்பால் என்றைக்கும் ஒருபடியான பேரன்பேபூண்டிருந்தனனென்பதை,

> "ஒருநாட்செல்லலமிருநாட்செல்லலம்
> பலநாட்பயின்றுபலரொடுசெல்லினுந்
> தலைநாட்போன்றவிருப்பினன்மாதோ
> வணிபூணணிந்தயானையியறே
> ரதியமான்" (புறம். 101)

என்னும் செய்யுளடிகளில் நன்குவிளக்கி ஔவையார் பெரிதும்புகழ்ந்திருக்கின்றனர்.

இவ்வள்ளலதுமுன்னோர்களே தேவர்களைப்போற்றிவழிபட்டும் அவர்கட்கு வேள்விக்கண் ஆவுதியையருந்துவித்தும் விண்ணுலகிலிருந்து பெறற்கரியகரும்பை இவ்வுலகிற்கொணர்ந்தனரென்பது,

> "அமரர்ப்பேணியுமாவுதியருத்தியு
> மரும்பெறன்மரபிற்கரும்பிவட்டந்து
> நீரகவிருக்கையாழிசூட்டிய
> தொன்னிலைமரபினின்முன்னோர்போல"

என்னும் புறப்பாட்டடிகளால் அறியப்படுகின்றது.

இம்மழவர்பெருமான் யுத்தத்திற்பேர்பெற்றவீரன். இவன் பரணர்3 என்னும் நல்லிசைப்புலவர்புகழ்ந்துபாடும்படி கோவலூரை வென்றானென்று 99-ம்புறப்பாடல் அறிவிக்கின்றது. அன்றியும், இவன் றனக்குப்பகைவர்களாய ஏழரசருடன்போர் செய்து வாகைமிலைந்தனன்.4 இதனை,

---

3அதிகமான் வீரமுங் கொடையும்பற்றிப் பரணராற் புகழ்ந்துபாடப்பட்டுள்ளான் என்பது கீழ்க்குறித்த அகநானூற்றுச்செய்யுட்களால்விளங்கும்.

> "நெடுநெறிக்குதிரைக்கூர்வேலஞ்சி
> கடுமுனையலைத்தகொடுவிலாடவ
> ராகொள்பூசலிற்பாடுசிறந்தெரியும்
> பெருந்தொடி" (அகம் 372)

> "..................வாய்மொழி
> நல்லிசைத்தரூஉமிரவலர்க்குண்ணிய
> நசைபிழைப்பறியாக்கழறொடியதியன்"
> (அகம் 162)

4அவர்கள் துநாடுகளையும் கைப்பற்றிக்கொண்டனன் என்பர் புறநானூற்றுரையாசிரியர்.

"..................அமையாய்செருவேட்
டிமிழ்குரன்முரசினெழுவரொடுமுரணிச்
சென்றமர்கடந்துநின்ஞற்றறுேன்றிய
வன்றும்பாடுநேர்க்கரியை"

என்னும் புறப்பாட்டடிகளால் அறியலாம்.

இவன், நல்லிசைப்புலவராகிய ஔவையாரை, அக்காலத்துக் கச்சியையாண்டதொண்டைமானுழைத் தூதனுப்பியதாக 95-ம்புறப்பாட்டால்தெரிகிறது. இவன் எக்காரணம்பற்றி அங்ஙனந்தூதனுப்பினுனென்று தற்காலத்து அறியக்கூடவில்லை. அத்தொண்டைமான் தன் போர்வலியின்பெருமையுணருமாறு தன்படைக்கலக்கொட்டிலைக் காட்ட ஔவையார்அவற்றைப்பார்த்து "இப்படைக்கருவிகளெல்லாம் போரிற்பயன்படாமையாற் பீலியணிந்து மாலைசூட்டிக் காம்புதிருத்தி நெய்யணிந்து காவலையுடைய அரமனைக்கண் வீணேதங்குவன; எம்முடைய அதிகன்வேல் பகைவரைக்குத்துதலான் நுனிமுரிந்துகொல்லன்பணிக்களரியிற் சிறியகொட்டிலிடத்துற்றன" என்று அத்தொண்டைமான்வீரத்தையிகழ்ந்து தமது அதிகன்போர்வீரத்தையே மேம்படுத்துரைத்தார்.

தொல்காப்பியப்புறத்திணையியல் ஏழாஞ்சூத்திரத்துரையில் "ஒருவன்மேற்சென்றுழி ஒருவன் எதிர்செல்லாது தன்மதிற்புறத்துவருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையினடங்கும்; அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதிகமானிருந்ததாம்" என்று ஆசிரியர்நச்சினுர்க்கினியர் எழுதியிருத்தலாற் சேரமானுக்கும் அதிகமானுக்கும் தகடூரின்கண் ஒரு பெரும்போர்நடந்திருக்கவேண்டுமென்பது அறியப்படுகிறது. இனி, ஔவையார்பாடிய "கடல்கிளர்ந்தன்னதகடூர்நாப்பண்" என்னும் 295-ம் புறப்பாட்டாலும் புறத்திரட்டிலேகாணப்படும் தகடூர்யாத்திரைப்பாடல்களாலும் தகடூரின்கண் ஔவையார்காலத்தில் ஒரு பெரும்போர்நடந்திருக்கவேண்டுமென்பது நன்குவிளங்குகிறது. இப்போர் மேற்கூறியசேரமானுக்கும் அதிகமானுக்குமே நடைபெற்றதாதல்வேண்டும். இதனை நன்குவிளக்கக்கூடிய மற்றொருபிரமாணம் பதிற்றுப்பத்திற்காணப்படுகிறது.

பதிற்றுப்பத்து எட்டாம்பத்தின்பதிகத்தில், இப்போர் தகடூ ரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறைக்கும் அதிகமானுக்கும்நடந்ததென் றும், சேரமானேவாகைமிலேந்தனனென்றும் சொல்லப்பட்டிருக்கின் றன. அன்றியும், சேரமான் தகடூரின்கண்போர்செய்து அதிகமானை வென்றவிஷயம் அவன்பெயர்க்குமுன்னால் அடையாகக்கொடுக்கப் பட்டுவழங்கும் 'தகடூரெறிந்த' என்னும் சொற்றொடரினாலும் நன்கு விளங்கிநிற்றல்காண்க. இப்போரில் அருங்குணமும் பெருங்கொடை யும்வாய்ந்த அதிகமான் உயிர்துறந்திருக்கவேண்டுமென்பது 295-ம் புறப்பாடலால் அறியப்படுகிறது. இவன் இறந்ததையறிந்த நல்லிசைப் புலவராய ஒளவையார் பெரிதும்மனமிரங்கி, "அவனையின்றிக் கழி கின்ற காலையும் மாலையும் இனியில்லையாகுக; யான் உயிர்வாழுநாளும் எனக்கு ஓர்பயன்படாமையின் அவையல்லவாகுக; நடப்பட்டகல்லின் கட் பீலியைச்சூட்டி நாராலரிக்கப்பட்டதேறலைச் சிறியகலத்தானுகுப் பவும் அதனைக்கொள்வனோ? கொள்ளானோ? சிகரமோங்கிய உயர்ந்த மலைபொருந்தியநாடுமுழுவதுங்கொடுப்பவும் கொள்ளாதவன்" என் னுங்கருத்துப்பட "இல்லாகியரோகாலைமாலை" என்றபாட்டைக்கூறி வருந்தினர் ; இவர் பின்னும் தம்மாற்றாமைதோன்ற அடியில்வரும் உருக்கமானபாடலைக்கூறிப்புலம்பினர்.

"அஞ்சொனுண்டேர்ச்சிப்புலவர்நாவிற்
சென்றுவீழ்ந்தன்றவனருநிறத்தியங்கியவேலே
யாசாகெந்தையாண்டுளன்கொல்லோ
வினிப்பாடுநருமில்லைப்பாடுநர்க்
கொன்றீகுநருமில்லை" (புறம் 235.)

இதன்பொருள்:-"அழகியசொல்லையாராயும் நுண்ணிய ஆராய்ச் சியையுடைய அறிவினையுடையோர்நாவின்கண்ணேபோய்வீழ்ந்தது அவனது அரியமார்பத்தின்கண்தைத்தவேல்; எமக்குப்பற்றாகிய எம் மிறைவன் எவ்விடத்துள்ளான்கொல்லோ? இனிப்பாடுவாருமில்லை; பாடுவார்க்கொன்றீவாருமில்லை" என்பதாம்.

இவ்வதிகமானது தவமகன் ஒளவையாரால் புகழ்பெற்ற பொகுட் டெழினியென்பான்; இவன் றன் அரும்பெறற்றந்தையாரைப்போன்று தானும் நல்லிசைப்புலவராகிய ஒளவையார்பால் நட்புரிமைபூண்டு, அவர்க்குச் சிறப்புப்பலசெய்தனன் என்பர்.

அதிகமான் நெடுமானஞ்சியின்வரலாறு இதற்குமேல் அறியவிடமில்லையாதலால் இனி இவனது நகரும் மலையும் யாண்டையனவென்பதையாராய்வாம். இவனது தலைமைநகராகிய தகடூர் மைசூர்இராஜ்யத்திலிருக்கிறதாகத்தெரிகிறது. சித்தூரைச்சார்ந்த போலூருக்கடுத்த திருமலையென்னும் சமணக்கிராமத்திலுள்ள ஒருகல்வெட்டால் அதிகமான், அதிகன் என்றுகூறப்படும் கேரளதேசத்தரசனொருவன் இருந்தானென்பதும், இவன்குமாரனாகிய விடுகாதழகியபெருமாள் தகடாவென்றுசொல்லப்பட்ட ஊரை யாண்டானென்பதும், இவன்வம்சத்தில் எழினியென்ற ஓரரசனிருந்தானென்பதும் அறியப்படுகின்றன. வடமொழியில் தகடாவென்பது தமிழில் தகடூர் என்று வழங்கிவந்தது போலும். இப்பொழுது தென்கன்னடம்ஜில்லாவிலுள்ள குதிரைமூக்குமலையே இவனுடைய குதிரைமலையாயிருக்கலாமென்றுகருத இடமுண்டு.

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,

திருப்புறம்பயம்.

---

# சுந்தரகாண்டம். (கம்பர்)

———:(o):———

ஸ்ரீ வால்மீகிபகவானால் வேதசாரங்கள் நன்குவிளங்கும்படிசெய்தருளப்பெற்ற ஸ்ரீமத்ராமாயணத்திலடங்கிய ஏழுகாண்டங்களிற் சிறந்தது சுந்தரகாண்டமெனப்பெயர்பெற்றதொன்று. அக்காண்டமிப்பெயர்வகித்ததற்கு அநேககாரணங்கள்கூறுவாருளர். அவைகளில் அதிகப்பொருத்தமுடையதும் மிகவும்சுலபமானதும் விசேஷமானதுமொன்றுண்டு. அதாவது: இக்காண்டத்தில் ஜீவாத்மாவினுடையஸ்வரூபத்தையும், ஆசாரியகிருத்தியத்தையும் மிகத்தெளிவாயும் அழகாயும் சித்தாந்தம்செய்திருப்பதால், சுந்தரகாண்டமெனப் பெயர்கிடைத்ததென்பதேயாம். அதற்கநுகுணமாகவே ஸ்ரீமத்வால்மீகராமாயணத்திற் சுந்தரகாண்டத்திற் பலவிடங்களிலும் விசேஷார்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. முதல்ஸ்லோகமாகிய,

"ததோ ராவணநீதாயா: ஸீதாயா: ஶத்ருகர்ஶந:
இயேஷ பதமந்வேஷ்டும் சாரணாசரிதே பதி"

என்பதற்கு, சாதாரணமாக 'மேலே கிஷ்கிந்தாகாண்டத்திற்கண்டபடி நிகழ்ந்தபிறகு, சத்துருவைநாசம்பண்ணத்தகுந்தஹநுமான் இராவணனாற்பெயர்த்துக்கொண்டுபோகப்பட்ட சீதையினுடைய இருப்பிடத்தைத்தேடுவதற்காக ஆகாயமார்க்கத்திற்பிரவேசிக்க எண்ணங்கொண்டார்' என்று 'பொழிப்புரை அமையும். ஆனாலும், முன்கூறியபடி ஜீவாத்மசொரூபசித்தாந்தபரமாகப் பெரியோர்களால் அதேஸ்லோகத்துக்குப் பின் வரு மா று விசேஷார்த்தம்சொல்லப்படுகிறது. அதாவது: சேதனர்களை உய்யக்கொள்வதற்காகவே ஏற்படுத்தியமுத்திரையையும் ஆக்ஞையையும்பெற்றபிற்பாடு அஞ்ஞானமானபகைவனை வேரோடுவெல்லத்தக்கஆசாரியன் (ஹநுமான்) பூர்வாசாரியர்களாலநுஷ்டிக்கப்பட்ட ஸத்ஸம்பிரதாயமார்க்கத்தில்நிலைத்தவராய், அவிவேகத்தால் தனக்கு ஸ்வாதீனம்பண்ணப்பட்ட சேதனனுடையஸம்ஸார மண்டலத்தையும், பகவத்ப்ராப்தியிலுண்டானஎண்ணத்தையும், ஸாத்விகஸம்பாஷணமுதலான அடையாளத்தையுந் தேடநினைத்தார் என்பதாம். மேற்கண்டவிதமாய் ஆரம்பஸ்லோகமே இந்த விசேஷார்த்தத்தையடக்கிக்கொண்டிருக்குமாயின், பின் வால்மீகசுந்தரகாண்டத்தில் அநேகஇடங்களில் இதையநுசரித்தே சேதனனுடையநிலை, ஆசாரியதரும மிவ்விரண்டையும்விரித்துச்சொல்லப்பட்டிருக்கிறதென்று பெரியோர்கள்சொல்லுவது வியக்கத்தக்கதன்று.

ஆனால், கம்பராமாயணத்தனியன்களிலொன்றிற் பின்வருமாறு காண்கிறோம்.

"கழுந்தராயுனகழல்பணியாதவர்கதிர்மணிமுடிமீதே
அழுந்தவாளிகள்தொடுசிலைராகவவபிநவகவிநாதன்
விழுந்தநாயிறதெழுவதன்முன்மறைவேதியருடனாராய்ந்
தெழுந்தநாயிறுவிழுவதன்முன்கவிபாடினதெருநாறே"

இதனுள் 'மறைவேதியருடனாராய்ந்து' என்பதனாலேயே, கீர்வாணராமாயணத்தின்ஸாரத்தைப் பிராம்மணோத்தமர்களுடன்தெரிந்தெடுத்தாரென்பது நன்குவிளங்கும். தவிரவும்,

"தேவபாடையினிக்கதைசெய்தவர்
மூவரானவர்தம்முளுமுந்திய
நாவினுருரையின்படிநான்றமிழ்ப்
பாவினுலிதுணர்த்தியபண்பரோ".

இதனுள் வால்மீகி, வசிஷ்டர், போதாயனர் இந்தமூன்றுமுனிவர்களுள்ளும் முதன்மையுள்ள வால்மீகிமுனிவரதுசொற்களுக்கிணங்க, (அல்லது இம்மூவர்கிருதிகளிலும், ஆங்காங்குள்ள முக்கியமானகிருதிகளையேதலைமேற்கொண்டு) இக்காவியத்தைச் செய்தருளினதாகக் கம்பரே வெளியிட்டிருக்கின்றனர். ஆதலால், கம்பநாட்டாழ்வார் ஸ்ரீமத்ராமாயணத்தை, "........தமிழிலேதாலைநாட்டி......பார்மேல் நம்புபாமாலையாலேநரருக்கின்றமுதமீந்தான்" என்பதற்கிணங்கச் செய்தருளினுரென்பதற்கு ஐயமில்லை. அப்படியாயின் வால்மீகராமாயண சுந்தரகாண்டத்தில் மேற்குறித்தபடி ஜீவாத்மாவின்சொரூபம் ஆசாரிய தருமம் இவைகள் விளங்கப்பெறின், கம்பராமாயணசுந்தரகாண்டத்திலும் சிலசெய்யுள்களிலாவது இந்தத்தத்வார்த்தங்கள் தெய்வப்புலவராகியகம்பரால் அடக்கப்பட்டிருக்கவேண்டுமென்ற உறுதியானநம்பிக்கையுடன் ஆராய்ந்துபார்த்ததிற் பின் எடுத்தெழுதப்பெறும் சிலபாட்டுகளில் விசேஷார்த்தங்கள்காணப்படுதலால் அவைகளை விரித்தெழுதத் துணிந்தேன்.

சுந்தரகாண்டம். உருக்காட்டுபடலம். பாட்டு 63.

"மீட்டுமுரைவேண்டுவனவில்லையெனமெய்ப்பேர்
தீட்டியதுதீட்டரியசெய்கையதுசெவ்வே
நீட்டிதெனநேர்ந்தனனெனுநெடியகையாற்
காட்டினனுராழியதுவாணுதலிகண்டாள்."

(இ - ள்) மீட்டுமுரை - முன்னமே, பகவானுடையசொரூபத்தையும், சௌலப்பியத்தையும், காருண்யத்தையும், சேதனனுக்கும் பகவானுக்குமுள்ளசம்பந்தத்தையும், சேதனனுடையபூர்வவாசனையையும், ஆசாரியன் (ஹநுமான்) எடுத்துச்சொன்னபின் மற்றும்சொல்லவேண்டியவிஷயம். வேண்டுவனவில்லை—இனிமேல், சேதனனுல்கேட்கப்பெறுவதும், ஆத்மா உஜ்ஜீவிக்கும்பொருட்டுள்ள அவசியமானதுமான உபாயம் வேறுயாதொன்றுமில்லை. என—என்று இவ்விதமாகச் சொல்லி. மெய்ப்பேர்தீட்டியது—நாராயண என்னும்பெயரும் உயிருமானதிருநாமத்துடன் ஓம்நமோஎன்ற உடலாகிய (மெய்யாகிய) எழுத்துக்களைச்சேர்த்துச்செய்த திவ்யமங்களகரமான அஷ்டாக்ஷரம் என்ற

திருமந்திரமொன்றுண்டு. தீட்டரியசெய்கையது—அந்தத்திருமந்திரமானது எழுதவரிது, எழுதற்பாலதன்று, எழுதாக்கிளவி, (வேதவாக்கியம்) அதை எழுதமுடியாது, எழுதுதற்கடங்காது, எழுதிக்கற்றுக்கொள்ளுவதிற்பயனில்லை, அது உபதேசமந்திரம், உபதேசக்கிரமத்தாலடையத்தக்கதேயொழிய வேறல்ல. (ஆகையால்) செவ்வே—நேராக (முறைப்படி) அதாவது குருபரம்பராபூர்வமாக, அல்லது உபதேசவிதிப்படி. நீட்டிதென—நீ சேதனனுக்கு இந்த அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசம்பண்ணு என்றுசொல்லி. நேர்ந்தனன்—எனக்குப் பகவான்கொடுத்தார், அதாவது ஆக்ஞாபித்தார். என—என்று உபதேசம்பண்ணக்கருதி. நெடியகையால்—விசேஷ அர்த்தபுஷ்டியுள்ளதும் 'ஞானவித்தகந்தரித்தசெங்கை' என்பதற்கிணங்க ஞானக்குறியுமாகிய சின்முத்திரையினுல். காட்டினனொராழி-வட்டவடிவாய்த் தனது திருக்கையைச் சின்முத்திராரூபமாகவைத்துக்கொண்டு, பகவதாக்ஞாரூபமானவேதவாக்கியமாயும், மிகவும் ஆழ்ந்தபொருள்களையுடையதாயுமிருப்பதால் ஆழியென்றுசொல்லத்தக்கதாயுள்ள திருவஷ்டாக்ஷர மந்திரத்தை, அநுமானுகியவாசரியன் சீதையாகியசேதனனுக் குபதேசித்தார். அது வாணுதலிகண்டாள்—சேதனனும் உபதேசம்பெற்றபின் அந்தத்திருமந்திரத்தின்பெருமையை அறிந்தான். அதனுலக மகிழ்ந்தான். அகத்தினழகு முகத்தில்தெரியுமாதலால் ஆத்மாவடைந்த ஆனந்தத்தை வெளிப்படுத்திக்காட்டிய முகமலர்ச்சிகொண்டு, வாணுதலிகண்டாள் எனக்கூறப்பட்டது. இன்னும், திருமந்திரோபதேசத்துக்குரிய வைஷ்ணவசின்னமான ஊர்த்துவபுண்டரமணிந்த நெற்றியும் பகவத்பாரதந்திரியமுமுடையசேதனனென்பதுதோன்ற வாணுதலி யென்று ரென்பதும் பொருந்தும்.

எனவே, அநுமான் சீதைக்கு ஸ்ரீராமனது கணையாழியைக் கொடுத்தார் என்பது இச்செய்யுளுக்குச் சாமானியக்கருத்தாயிருப்பினும் விசேஷார்த்தமாக, அநுமானுகிய ஆசாரியன் ராக்ஷஸமண்டலமாகிற சம்ஸாரபந்தத்தால்நலிவடையாநின்ற சீதையாகிய சேதனனுக்குத் திருவாழியாகிய திருவஷ்டாக்ஷரத்தை வேதவிதிப்படி பிரஸாதித்தார் என்பதையும் இச்செய்யுள் அடக்கிக்கொண்டிருக்கிறது போலும்.

(இன்னும் வரும்.)

எம். எஸ். சேஷையங்கார்.

# மேற்கோள்விளக்கம்.

(o)

## தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட குறுந்தொகைப்பாட்டுகளின் அட்டவணை.

பண்டைத் தமிழ்நூலுரையாசிரியர்களால் ஆங்காங்குக் காட்டப் பட்ட உதாரணச்செய்யுள்கள்பலவும் மிகப்பழமைவாய்ந்தனவாகவும், பெரும்பாலும் இஃதின்னநூலிலுள்ளதெனப்புலப்படாவாகவு மிருக்கின்றன. அவற்றுள், இயன்றவளவு தெரிந்தவரை இஃதின்னநூலிலுள்ளதெனவெளியிடுவது, தமிழ்நூலாராய்ச்சிசெய்பவர்களுக்கு மிகப் பயன்படுமெனக்கருதி, தொல்காப்பியப்பொருளதிகாரத்தின் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட குறுந்தொகைப்பாட்டுகளின் அட்டவணையாகிய இது, திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துப் புத்தகசாலையிலுள்ள தொல்காப்பியப்பொருளதிகாரமேற்கோளகராதியைத் தழுவி எழுதி வெளியிடப்பெற்றிருக்கிறது. பாட்டின் எண்கள் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் குறுந்தொகைப்பிரதியிலுள்ளவாறு காட்டப்பட்டுள்ளன. மேற்கோளின்முதற்குறிப்புகள் அவ்வெண்ணுள்ளபாட்டின்முதற்குறிப்பாகவேனும் அப்பாட்டின் யாதேனுமோரடியின்முதற்குறிப்பாகவேனுமிருக்கும்.

| குறுந்தொகைப் பாட்டின் எண். | மேற்கோளின்முதற்குறிப்பு. | தொல்காப்பியப்பொருளதிகார அச்சுப்புத்தகப்பக்கம். |
|---|---|---|
| கடவுள் வாழ்த்து. | தாமரைபுரையும் | ருஉ௩, எ௩உ, எசுஉ. |
| க | செங்களம்படக்கொன் | ௩0ரு, எசு0. |
| உ | *கொங்குதேர்வாழ்க்கை | ௩சு,உ௩ரு,ச௩சு,எசகூ. |
| ,, | *கார்மஞ்செப்பாது | உஉஎ. |
| ௩ | நிலத்தினும்பெரிதே | ௩சுகூ, சஅஉ. |

* இவ்வடையாளமிட்டப்பெற்றவை, இறையனாரகப்பொருளுரையிலும் ௩சு-ம் பக்கத்தில் வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| ௫ | அதுகொறேழி | ௨௮௯. |
| ௬ | நள்ளென்றன்றே | ௨௭௫. |
| ௭ | *வில்லோன்காலன் | ௬௯, ௭௫௩, ௭௫௮. |
| ,, | *வேய்பயி | ௭௫௮. |
| ௮ | கழனிமாத்து | ௧௭, ௩௯௮, ௫௪௨. |
| ௯ | யாயாகியளே | ௩௯௧. |
| ,, | தண்ணந்துறைவன் | ௭௫௭. |
| ,, | பாசடைநிவந்த | ௫௩௭. |
| ௧௧ | கோடீரலங்குவளை | ௨௯௨. |
| ௧௨ | எறும்பியளையிற் | ௬௨௫, ௭௩௮, ௩௮௧. |
| ௧௩ | மாசறக்கழீஇ | ௩௧௦. |
| ௧௫ | பறைபடப் | ௩௨௯, ௩௪௦. |
| ௧௭ | மாவெனமடலு | ௨௫௨, ௫௦௬, ௮௦௧. |
| ௧௮ | வேரல்வேலி | ௩௧௪, ௭௩௨. |
| ௧௯ | எவ்வியிழந்த | ௩௫௮, ௪௦௭, ௫௦௬, |
| ,, | பூவில்வறுந்தலை | ௪௩௫. |
| ௨௦ | அருளுமன்பும் | ௩௮௧. |
| ௨௧ | வண்டுபடத்ததைந்த | ௩௨, ௩௭௯. |
| ௨௩ | அகவன்மகளே | ௪௪௧. |
| ௨௫ | யாருமில்லை | ௨௮௮. |
| ௨௬ | அரும்பறமலர்ந்த | ௨௮௮. |
| ,, | வரையாடுவன்பறழ் | ௭௭௯. |
| ,, | கடுவனுமறியும் | ௭௯௪. |
| ௨௭ | எனக்குமாகா | ௪௭௦. |
| ௨௯ | நல்லுரையிகந்து | ௨௫௧. |
| ௩௦ | கேட்டிசின்வாழி | ௨௯௦. |
| ௩௩ | அன்னுயிவனே | ௩௮௩. |
| ௩௪ | ஒறுப்பவேவலர் | ௨௬௪. |
| ௩௫ | நாணிலமன்ற | ௪௩௯. |
| ௩௭ | நசைபெரிதுடையர் | ௪௫௮. |
| ௩௯ | வெந்திறற்கடுவளி | ௩௮௧. |

* இவ்வடையாளமிடப்பெற்றவை, இறையனாரகப்பொருளுரையிலும் ௧௧௨-ம் பக்கத்தில் வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| ௪௦ | யாயும்யாயும் | ௨௩௬, ௩௫௪. |
| ௪௧ | காதலருழைய | ௩௮௨. |
| ௪௪ | காலேபரிதப் | ௭௯. |
| ௪௫ | காலையெழுந்து | ௧௬, ௩௯௩, ௪௬௬. |
| ௪௬ | ஆம்பற்பூவின் | ௩௮௧. |
| ௪௭ | கருங்கால்வேங்கை | ௨௬, ௨௬௦, ௫௩௮. |
| ,, | இரும்புலிக்குருளை | ௭௭௮. |
| ௪௯ | அணிற்பல்லன்ன | ௨௩௩. |
| ௫௧ | கூர்முண்முண்டகக் | ௩௨௧. |
| ௫௩ | எம்மணங்கினவே | ௨௪௦. |
| ,, | சூரரமகளி | ௧௧. |
| ௫௪ | யானேயீண்டை | ௮௯, ௭௬௨. |
| ௫௬ | வேட்டைச்செந்நாய் | ௩௫௯. |
| ௫௭ | பூவிடைப்படினு | ௨௩௫. |
| ௫௮ | *இடிக்குங்கேளிர் | ௨௪௩, ௭௪௭. |
| ௬௨ | கேரடலெதிர்முகைப் | ௩௧. |
| ௬௩ | ஈதலுந்துய்த்தலு | ௭௨, ௩௬௧, ௪௩௫. |
| ௬௬ | மடவைமன்ற | ௩௩, ௩௯௬. |
| ௬௯ | கைம்மையுய்யா | ௭௭௭. |
| ௭௦ | ஓடுங்கீரோதி | ௨௪௧. |
| ௭௧ | *மருந்தெனின்மருந்தே | ௫௪௩, ௭௫௮, ௭௬௨. |
| ௭௨ | பூவொத்தலமரும் | ௩௬. |
| ௭௩ | மகிழ்நன்மார்பே | ௩௧௦. |
| ௭௫ | நீகண்டனையோ | ௩௮௨. |
| ௮௦ | கூந்தலாம்பன் | ௪௦௨. |
| ௮௧ | இவளே, நின்சொற்கொண்ட | ௩௦௧. |
| ௮௪ | *பெயர்த்தனென்முயங்க | ௩௨௮, ௭௫௧. |
| ௮௫ | உள்ளூர்க்குரீஇத் | ௭௯௦. |
| ௮௭ | மன்றமராத்த | ௨௭௩. |
| ௮௯ | பாவடியுரல | ௩௨௪. |
| ௯௩ | நன்னலந்தொலைய | ௩௮௦, ௪௧௦. |

*இவ்வடையாளமிடப்பெற்றவை, முறையே, இறையனாரகப்பொருளுரையிலும் ௪௪, ௧௬௫, ௧௧௧-ம் பக்கங்களில் வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| ௯௭ | யானேயீண்டை | ௨௭௧, ௭௬௭. |
| ௯௮ | இன்னளாயினள் | ௨௬௯, ௫௧௯. |
| ௯௯ | உள்ளினேனல்லனே | ௩௬௪. |
| ௧௦௧ | விரிதிரைப்பெருங்கடல் | ௩௫௦. |
| ௧௦௨ | உள்ளினுள்ளம் | ௨௭௦, ௫௦௮. |
| ௧௦௪ | அம்மவாழி | ௨௧. |
| ௧௦௬ | புல்வீழிற்றி | ௩௮௧, ௫௦௮. |
| ௧௦௭ | பிள்ளைவெருகிற் | ௭௭௭. |
| ௧௧௦ | வாராராயினும் | ௩௮௨, ௭௬௨, ௭௬௭ |
| ௧௧௩ | ஊர்க்குமணித்தே | ௩௦௫. |
| ௧௧௪ | நெய்தற்பரப்பிற் | ௩௦௧. |
| ௧௧௫ | *பெருநன்றாற்றி | ௩௦௯. |
| ௧௧௯ | *சிறுவெள்ளரவின் | ௭௭௮. |
| ௧௨௧ | மெய்யோவாழி | ௨௮௧. |
| ௧௨௮ | *குணகடற்றிரையது | ௨௪௨, ௪௦௨, ௪௮௦. |
| ௧௨௯ | *எலுவசிறாஅர் | ௨௪௨, ௪௫௨, ௭௫௫. |
| ,, | *மாக்கடனடுவ | ௩௨௬. |
| ௧௩௦ | நிலந்தொட்டுப் | ௬௨. |
| ௧௩௨ | கவவுக்கடுங்குரை | ௩௫௩. |
| ,, | குவவுமென்முலையள் | ௨௦௧. |
| ௧௩௭ | மெல்லியலரிவை | ௨௩௬. |
| ௧௩௮ | கொன்னூர்துஞ்சினும் | ௨௫௯. |
| ௧௩௯ | மனையுறைகோழிக் | ௩௯௪. |
| ௧௪௦ | வேதினவெரிநின் | ௪௧௨. |
| ௧௪௧ | வளைவாய்ச்சிறுகிளி | ௨௮௫. |
| ௧௪௩ | அழியலாயிழை | ௩௧௧. |
| ௧௪௫ | உறைபதியன்றித் | ௨௭௭. |
| ௧௪௬ | அம்மவாழிதோழிநம்மூர்ப் | ௩௧௯. |
| ௧௪௯ | *அளிதோதானே | ௮௦, ௨௬௩. |
| ,, | காமநெரிதரக் | ௨௬௭. |
| ௧௫௪ | யாங்கறிந்தனர்கொ | ௩௮௦. |

* இவ்வடையாளமிடப்பெற்றவை, முறையே, இறையனாரகப்பொருளுரையிலும், ௧௦௯, ௪௩, ௯௨, ௪௩, ௧௦௭-ம் பக்கங்களில் வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| கருரு | முதைப்புனங்கொன்ற | ஙஅஉ. |
| கருஎ | குக்கூவென்றது | ஙஙங, சஉசா. |
| கருகூ | தழைபணி | உஎஎ. |
| கசா0 | நெருப்பினன்ன | ருஉச. |
| கசாக | பொழுதுமெல்லின்று | உஎசா, ஙஉஎ. |
| கசாஎ | முளிதயிர்பிசைந்த | சரு, கூஎ. ச0ரு. |
| கசாகூ | சுரஞ்செல்லியானை | ங0கூ. |
| கஎசா | *ஒருநாள்வாரல | ங0ங. |
| கஎஅ | அயிரைபரந்த | ஙஅஎ, ருகக. |
| கஅக | இதுமற்றெவனோ | ஙஎகூ. |
| கஅஉ | விழுத்தலைப்பெண்ணை | உருஉ. |
| கஅச | அறிகரிபொய்த்த | சஉக. |
| ககூக | உதுக்காணதுவே | ஙஅஉ. |
| ககூசா | வேம்பின்பைங்கா | ஙகூங, ஙகூச. |
| ககூகூ | பெறுவதியையா | உருச. |
| உ0ச | காமங்காம | உசங, எருக. |
| உ0ரு | மின்னுச்செய்கருவியப் | உஎச. |
| உ0அ | ஒன்றேனல்லேன் | கூ0, ருச0, ருசஉ. |
| உகசா | அவரே, கேடில்விழுப்பொரு | ருஎசா, சா0எ, சாரு0. |
| உஉக | அவரோவாரார்முல்லையும் | ஙஉ. |
| உஉஉ | *தலைப்புணைக்கொளினே | உசரு. |
| உஉரு | கன்றுதன்பயமுலை | சருஎ. |
| உஉகூ | இவனிவளைம்பால் | உஉஎ. |
| உஙங | கவலைகெண்டிய | உருரு. |
| உஙரு | ஓம்புமதிவாழிய | உருரு. |
| உஙகூ | தொடிஞெகிழ்ந்தனவே | சகூங, ரு0உ. |
| உச0 | பனிப்புதலிவர்ந்த | உஅகூ. |
| உசக | யாமெங்காமங் | உஅ0. |
| உசஉ | *கானங்கோழி | ச0ரு, எகூ0. |
| உசங | மானடியன்ன | உஎஉ. |
| உசச | பல்லோர்துஞ்சும் | ஙகங. |

* இவ்வடையாளமிட்டப்பெற்றவை, முறையே, இறையனாகப்பொருளுரையிலும், எஉ, கூஅ, கஎ0-ம் பக்கங்களில் வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| ௨௪௬ | பெருங்கடற்றிரை | ௨௮௩. |
| ௨௬௨ | ஊஉரலரெழச் | ௬௬, ௭௫௨. |
| ௨௭0 | தாழிருடுமிய | ௩௬௬. |
| ௨௭௨ | தீண்டலுமியைவது | ௨௩௯. |
| ௨௭௬ | பணைத்தோட்குறுமகள் | ௨௫௧. |
| ௨௮0 | கேளிர்வாழியோ | ௨௪௩, ௭௫௧, ௭௫௬. |
| ௨௯0 | காமந்தாங்கும் | ௩௬௯. |
| ௨௯௨ | மண்ணியசென்ற | ௨௬௨. |
| ௨௯௪ | கடலுடனாடியும் | ௩௧௩. |
| ௨௯௫ | உடுத்துந்தொடுத்தும் | ௪0௭, ௪௫௫. |
| ௩00 | குவளைநாறும் | ௨௩௬. |
| ௩0௧ | முழவுமுதலரைஇய | ௨௫௯. |
| ௩0௨ | உரைத்திசிற்றோழியது | ௨௮௯. |
| ௩௧௨ | இரண்டறிகளவி | ௨௫௧. |
| ௩௩௪ | சிறுவெண்காக்கை | ௨௭௨. |
| ௩௩௭ | முலையேமுகிழ்முகித் | ௩௧. |
| ௩௪௬ | நாகுபிடிநயந்த | ௩0௬. |
| ௩௫௩ | ஆர்கலிவெற்பன் | ௩0௫. |
| ௩௫௪ | நீர்நீடாடிற் | ௪௫௫. |
| ௩௫௫ | பெயல்கான்மறைத்தலின் | ௨௮௭. |
| ௩௬௧ | அம்மவாழிதோழியன்னைக் | ௨௭௫. |
| ௩௬௨ | தண்டாரகலமும் | ௭௫௫. |
| ௩௬௫ | கோடீரிலங்குவளை | ௩௧௪. |
| ௩௭௪ | எந்தையும்யாயும். | ௩௨0. |
| ௩௮௩ | நீயுடம்படுதலின் | ௨௭0. |
| ௩௮௫ | பலவிற்சேர்ந்த | ௨௭௮. |
| ௩௮௯ | நெய்கனிகுறும்பூழ்க் | ௩௨௧. |
| ௩௯0 | எல்லுமெல்லின்று | ௬௭. |
| ௩௯௬ | பாலுமுண்ணாள் | ௭௫௧. |
| ௩௯௭ | *நனைமுதிர்ஞாழற் | ௩0௯. |
| ௪0௧ | அடும்பினார்மலர் | ௨௮௨. |

* இவ்வடையாளமிடப்பெற்றது இறையனாரகப்பொருளுரையிலும் ௧0௯-ம் பக்கத்தில் வந்துள்ளது.

# உவமவிளக்கம்.*

———:(o):———

உவமமென்பது ஒருபொருளோடு ஒருபொருளினை ஒப்புமை கூறுதல். தருக்கநூலோர் உவமத்தை ஓர் அளவையாகக்கொள்வர். அலங்காரநூலோர் அதனை ஓர் அலங்காரமாகக்கொள்வர். தமிழிலக்கணநூலோர் அதனைப் பொருள்புலப்படுக்குங்கருவியாதல்பற்றிப் பொருளுறுப்பாகக்கொண்டனர்.

*தருக்கநூலோரும், பண்டைத்தமிழிலக்கணநூலோரும், உவமையைப் பெரும்பாலும் பொருளின்புலப்பாட்டிற்குக்காரணமாகக்கொள்ளுதலினால் அவ்விருவரும் கருத்துவகையால் வேறுபாடுற்றிலர். அலங்காரநூலோர் அன்னரல்லர். அன்றியும், பண்டையிலக்கணநூலில், பொருளுறுப்பாகக்கூறிய உவமவகையுட்சிலவற்றையும் வேறுசிலவற்றையுந்திரட்டிப் பிற்காலத்து வடமொழியாளர் அவை செய்யுட்கு அலங்காரமென நூல்செய்தாரேயன்றித் தொல்லாசிரியர் அங்ஙனஞ் செய்திலர். வடமொழிமதம்பற்றி நூல்கள் எழுந்தபிற்காலத்தில், தமிழிலும் வடமொழியலங்காரம்போன்று அணிநூல்களியற்றப்பட்டன. அவ்வணியையும் இலக்கணத்தின்பகுதியாகக்கொள்ளுதலே தமிழ்மரபாயிருக்கின்றது. அணியென நூலியற்றுதல் பொருத்தமுடைத்தன்றென்பது சிலதமிழ்நூலுரையாசிரியர்களின்கருத்து. அதற்கு அவர்கூறுங்காரணங்களுட்சில:—1. அணியென நூலியற்றினோர்கூறியஇலக்கணத்திற்பிழையாது செய்யுட்செய்தவழியும் வல்லோர்செய்யின் அணியுடைத்தாகியும் அல்லோர்செய்யின் அணியுடைத்தன்றாகியும் இருத்தலின் அவையெல்லாம் செய்யுட் கணியென ஒருதலையாகக்கூறலமையா; 2. செய்யுட்கு அணிசெய்யும்பொருட்டிறனெல்லாம்விளங்கக்கூறாது சிலவற்றையேவரைந்து அணியெனக் கூறுதல் குன்றக்கூறலாய்முடியும்; 3. அணியெனப்படின் மெய்யின் அணிபோல் அவை செய்யுட்குவேறாகிநிற்றல்வேண்டும்; என்பன. இதனை "நிரனிறுத்தமைத்த" என்னும் உவமவியலிறுதிச்சூத்திரத்துப் பேராசிரியருரையிற் பரக்கக்காணலாம்.

---

*இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றுவது வருஷக்கூட்டத்திற் படிக்கப்பெற்றது.

அகனும் புறனுமாயபொருட்கூறுகளை அவ்வவற்றினியல்புகூறி யுள்ளவாறு புலப்படுத்தல்வேண்டும். இயல்புகூறுதல்மாத்திரையானே பொருள்புலப்படாவிடத்தும்,அவற்றிற்குப்பெருமைசிறுமைகூறவேண்டியவிடத்தும் ஒப்புமையுள்ளபிறபொருள்களோடுவமித்துவிளக்கவேண்டும். அணிநூலாரும் தொடக்கத்திற் றன்மையணியும் அடுத்து உவமையணியுங் கூறிப்போந்தனர். இவ்வாற்றல் உவமம் பொருட்குப் பெரியதோருபகாரமுடைத்தாதல்பெறப்படுகின்றது. " வடநூலாருள்ளே சித்திரமீமாஞ்சையென்னும் அலங்காரகாரர் உவமையணியொன்றே வேறுபடுத்திக்கூறுந்திறத்தாற் பலவித அலங்காரங்களாகுமென்பர் " எனக்கூறி உதாரணங்களுங்காட்டினர்; சுன்னாகம், அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள். (தண்டியலங்காரம். பக்கம் 40-41.)

உவமவுறுப்புக்கள் உவமிக்கும் உவமையும், உவமிக்கப்படும் பொருளும், அவ்விரண்டன்கண்ணுமுள்ள பொதுத்தன்மையும், அவற்றைவிளக்கவரும் உருபிடைச்சொல்லுமென நான்காம். உவமந்தான் வெளிப்படையுவமம், உள்ளுறையுவமமென இருவகைப்படும். அவற்றுள் வெளிப்படையுவமத்தை முதற்கண்விளக்குதும். உவமையும் பொருளும் வெளிப்பட்டேநிற்பது வெளிப்படையாகும்.

உவமந்தோன்றுதற்குரியநிலைக்களம், சிறப்பு நலன் வலி காதல் இழிபு என்னும் ஐந்துமாகும். ஒருபொருள் அதன்கட் செயற்கையானுளதாகியசிறப்புப்பற்றியாவது, இயல்பினுள்ள அழகுபற்றியாவது, வலிபற்றியாவது, அவையில்வழியும் உளவாகக்கொண்டுரைக்குங் காதல்பற்றியாவது, இழிபுபற்றியாவது அதனோடு ஒப்புமையுள்ள வேறுபொருளோடுவமிக்கப்படுமன்றி யாதும் இயைபின்றியே வாளா உவமிக்கப்படுமாறில்லை. உவமைக்கும் பொருட்குமுள்ள பொதுத்தன்மை வினை, பயன், மெய், உரு என்ற நான்குமாம். அவற்றானுவமிக்குமிடத்துப் பொருளினும் உவமை உயர்ந்ததாகல்வேண்டும். உவமையும் பொருளும் பொருந்தியனவென்று பிறர்மகிழும்படியும் உவமிக்கவேண்டும். கருமைப்பண்புபற்றி மயிற்றோகைபோலுங்கூந்தலென்னுது காக்கைச்சிறகுபோலுங் கருமயிரென்றுகூறுதலும், தவறுமற்பாய்தல்பற்றிப் புலிபோலப்பாய்ந்தானென்னுது பூனைபோலப்பாய்ந் தானென்றுகூறுதலும் பொருந்தாவாம். புலியன்னவீரன் வினையுவமம்.

மழைபோலுங்கை பய்னுவமம். உடுக்கைபோலும்இடை மெய்புவமம். பவளம்போலும்வாய் உருவுவமம். புலியன்னவீரன் என்பது அது பாயுமாறேபாய்வன் எனத் தொழில்பற்றியொப்பித்தமையின் வினையுவமமாயிற்று. ஏனையவு மிவ்வாறேகாண்க. அளவு, சுவை, தண்மை, வெம்மை, நன்மை, தீமை, சிறுமை, பெருமைமுதலாயினவெல்லாம் வினைமுதலியநான்கன்பகுதியாயடங்கும்.

பவளவாயென உவமைக்கும் பொருட்கும் பொதுவாகிய ஒப்புமைக்குணத்தைவிதந்துசொல்லாவிடில் அது ‘சுட்டிக்கூறாவுவமம்’ எனப்படும். “பவளம்போற் செந்துவர்வாய்” எனப் பொதுத்தன்மையை விதந்துசொல்லின், சுட்டிக்கூறியவுவமமாகும். இவற்றை முறையே தொகையுவமையென்றும், விரியுவமையென்றும் தண்டியலங்காரங் கூறுகின்றது. உவமவுருபுதொக்குநிற்றலை உவமத்தொகையென்றும், விரிந்துநிற்றலை உவமவிரியென்றும் பேராசிரியர்கூறினர்.

தண்டியலங்காரத்திற்கூறப்பட்டுள்ள ஐயவுவமை, விபரீதவுவமைகள் தொல்காப்பியர்கூறிய ‘தடுமாறுவமம்’ என்பதிலடங்கும். தடுமாறுவமத்தில் உவமையைப் பொருளாகவும், பொருளை உவமையாகவும் உரைத்தவழியும் பொருளினும் உவமை உயர்ந்ததாகல்வேண்டுமென்னும்விதிப்படி அங்கு உவமையாகப்போந்தபொருளை உயர்ந்ததாக்கியேயுரைக்கல்வேண்டும்.

உவமையும் பொருளும் பலவாக வேறுவேறு வரிசையாக நிறுத்திக் கொண்டுகூட்டியுவமித்தலும் உண்டு; அது ‘நிரனிறையுவமம்’ எனப்படும்.

அலங்காரநூல்களிற்கூறப்படுகிற உவமவிகற்பங்களிற்பலவற்றையும், வேற்றுமை தற்குறிப்பேற்றம் திருட்டாந்தம் விலக்கு முதலிய அலங்காரங்கள்பலவற்றையும், ஆசிரியர்தொல்காப்பியனார் ‘வேறுபட வந்தவுவமத்தோற்றம்’ என அடக்கினர்.

இனி, சிறப்புமுதலிய ஐவகைநிலைக்களத்தும் வினைமுதலிய பொதுத்தன்மைநான்கானும் உவமம்நிகழுமெனவே, அவை தம்மினுறழ உவமம் இருபஃதாகும். அவையும், சுட்டிக்கூறாவுவமம் முதலியவாக விகற்பித்து வழக்கிற்குஞ் செய்யுட்குமுரியவாய் நகைமுதலிய எண்வகைமெய்ப்பாடுந்தோற்றுவித்துநிகழுமாகலின் அவற்றானெல்லாமுறழ உவமவிகற்பம் இறப்பப்பலவாம்.

சுருங்கச்சொல்லுமிடத்து உவமமெல்லாம் உவமிக்கப்படும் பொருட்குப் பெருமைசிறுமைகூறுதலும், அவ்வாறன்றி அவற்றி னியல்பைப் பட்டாங்குகூறுதலுமுடையனவாம். பொருளினியல்பை உவமத்தால் விகாரமுறுத்தாது பட்டாங்குகூறும்வழக்கைப் பத்துப் பாட்டுமுதலிய நல்லிசைப்புலவர்செய்யுளிடத்துப் பெரிதுங்காணலாம். உதாரணமாகப் பின்வருவனகாண்க:—

"நீளரையிலவத்தலங்குசினைபயந்த
பூளையம்பசுங்காய்புடைவிரிந்தன்ன
வரிப்புறவணிலொடு" (பெரும்பாணாற்றுப்படை.)

"ஓங்குநிலையொட்டகந்துயின்மடிந்தன்ன
வீங்குதிரைகொணர்ந்தவிரைமரவிறகின்" (சிறுபாணாற்றுப்படை.)

"..................வேழத்துப்
பாம்புபதைப்பன்னபரூஉக்கைதுமிய"

"பொய்பொருகயமுனிமுயங்குகைகடுப்பக்
கொய்பதமுற்றனகுவவுக்குரலேனல்"

"விளைதயிர்ப்பிதிர்வின்வீயுக்கிருவிதொறுங்
குளிர்புரைகொடுங்காய்கொண்டனவவரை"

"மேதியன்னகல்பிறங்கியவின்
வாதிகையன்னகவைக்கதிரிறைஞ்சி"(இவைநான்கும் மலைபடுகடாம்)

"வேப்புநனையன்னநெடுங்கட்கள்வன்"

"அம்பணத்தன்னயாமையேறிச்
செம்பினன்னபார்ப்புப்பலதுஞ்சும்"(இவையிரண்டும் ஐங்குறுநூறு)

இன்னோரன்னகருத்துக்களாற் பண்டைத்தமிழ்ப்புலவராயினாரது உலகியற்பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சித்திறன் அறிந்து வியக்கத் தக்கதாகின்றது. இனி, உவமையும் பொருளும் ஒருநிகரனவாயிரா மல் மிகப்பெரியவும் மிகச்சிறியவுமாயிருப்பின் வழக்குவழிப்பட்டுச் சிறப்பிற்றீராதனவாயிருத்தல்வேண்டும். "மாக்கடனடுவணெண்ணாட் பக்கத்துப்— பகுவெண்டிங்கள்தோன்றியாங்குக்—கதுப்பயல்விளங்குஞ் சிறுநுதல்". என்று கூந்தலுக்கும் நெற்றிக்கும் மிகப்பெரியவாகிய கடலையும் பிறையையும் உவமைகூறினும் அவ்வாறுவழக்குடைமையிற் சிறப்பிற்றீராவாயின. இவ்வாறன்றி "மேருமால்வரை காம்பொத்து விண்முகடு குடையொத்து விண்மீன்கணம் முத்துப்போன்றன"என்று

உலகவரம்பிறந்து பொருளைப்புகழ்தற்பொருட்டு உவமங்கூறுதல் தமிழ் வழக்கன்றும். உவமைக்கண் முதல் சினை திணை பால் மயங்கிவரினும் மரபுநிலைதிரியாதன கொள்ளப்படும். சந்திரன்போன்ற முகம்போலுந் தாமரையென உவமம் அடுக்கிக்கூறுதல் குற்றமாம். அன்ன, ஆங்க முதலிய உவமவுருபுகளெல்லாவற்றையும் எல்லாவுவமத்திற்குங்கொள்ளாது பொருள்நோக்கியும் மரபுநோக்கியும் வினையுவமை முதலியவற்றிற்கு உரியன விதந்துகொள்ளல்வேண்டும். ஒருபொருட்கு ஒரு பொருளை யுவமங்கூறுங்கால் வினைபயன்முதலியவற்றுள் ஒன்றேயன்றி இரண்டுமுதலியனபற்றிக்கூறவும்படும்.

இனி உள்ளுறையுவமமாவது உவமையும் உவமிக்கப்படும்பொருளுமாகிய இரண்டனுள், பொருளினைக்கிளந்துகூறாது இது இன்ன பொருட்குவமமாயிற்று என அறிவுடையோர் ஊகித்துணர்ந்து துணியுமாறு உவமமாத்திரமேகூறுதலாகும். உவமேயமாகியபொருளினைக் கிளந்துகூறாது உவமங்கொள்ளுதல் செவ்விதன்றாயினும் ஏனையுவமம்போன்று பொருள்கொள்ளப்படுதலின் அதுவும் ஒப்பினாகியபெயராய் உவமமெனப்படுவதாயிற்று. அதுபற்றியே ஆசிரியர்தொல்காப்பியனாரும் உள்ளுறையுவமமென்றும், உவமப்போலியென்றும் பெயர் கூறுவாராயினர். புலப்படக்கூறாமைபற்றி உவமப்போலியென்றாரேனும் அது நல்லுணர்வுடையோர்க்கே அரிதிற்கூறவும் உணரவும் படுவதாயநுட்பமுடைத்தாய் அகப்பொருட்குச்சிறந்ததாய்விளங்குதலின் ஏனையுவமத்தினும் தவலருஞ்சிறப்பினதாதல்பெறப்படும். இது நல்லுணர்வுடையோர்க்கே புலனாவதெனவே ஏனையுவமம்போல் வழக்கிற்குமுரியதாகாது செய்யுட்கேயுரியதாதல்பெறப்பட்டது. செய்யுளுள்ளும் புறத்திற்கன்றி அகத்திற்கேயுரியதாம். அகத்துள்ளும் குறிஞ்சி, மருதம், நெய்தலென்னுமூன்றற்கும், அவற்றுள்ளும் மருதத்திற்கும் சிறந்ததாம். பரத்தையிற்பிரிந்ததலைவன் பின் தலைவியைக் கூடுதற்பொருட்டுவாயில்விடுக்க வாயிலாய்வந்தார்பால், தலைவிக்கும் தோழிக்கும் கூற்றுநிகழும்பொழுது பரத்தையரிழிபும், தலைவன் கொடுமையுமுதலாயினவுணர்த்துதல்காரணத்தான் உள்ளுறைகூறப்பெறுவர், பெரும்பான்மையும். சிறுபான்மை ஏனையிடத்தும் உள்ளுறைநிகழும். நற்றாய், தந்தை, தன்னையர், ஆயத்தாரென்போர் உள்ளுறையுவமைகூறப்பெறுதவராவர். அவரொழிந்த தலைவன்,

தலைவி, தோழி, செவிலி, பாங்கன், பாணன், காமக்கிழத்திமுதலாயினு ரெல்லாரும் கூறுதற்குரியர். அவருள்ளும், தலைவியும் தோழியுமே கூறுதற்குச்சிறந்தோராவர்.

தலைவி உள்ளுறையுவமங்கூறுங்கால் மருதம் நெய்தல் என்னு மிரண்டிடத்தும் தானறிந்தபொருளானேகூறப்பெறுவள். சிறுபான்மை குறிஞ்சியிலறிந்தபொருளாற்கூறலுமுண்டு. தோழியும் செவிலியும் அந்நிலத்துள்ளனவெல்லாம் அறிந்து உள்ளுறைகூறுவர்; பிறநிலத் துள்ளனகூறுர். ஏனோரெல்லாம் இடம்வரைவின்றித் தாந்தாமறிந்த பொருளானெல்லாங்கூறப்பெறுவர். ஐந்திணைக்குமுரிய தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, தொழில், யாழ்முதலியகருப்பொருள் களிற் றெய்வமொழிந்தனவெல்லாம் உள்ளுறைதோன்றுநிலனும்.

இவையெல்லாம் உய்த்துணருங்கால் இது, நாடகவழக்கினும் உல கியல்வழக்கினும் பாடல்சான்றபுலனெறிவழக்காய்த் தமிழ்முதனூலா சிரியனாற்படைக்கப்பட்டதாய்த்தோன்றுதலின், தம்நுண்ணுணர்வின் மிகுதியால் உள்ளுறைகூறும்வழக்குத் தமிழ்மக்கட்கேயுரித்தெனல் தேற்றமாம். சங்கமருவியதொகைநூல்களில் அகம்பற்றிய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்பவற்றி னெல்லாம் உள்ளுறைகூறும்வழக்கைப் பரக்கக்காணலாம்.

"கரைசேர்வேழங்கரும்பிற்பூக்கும்
துறைகேழூரன்கொடுமைநன்று
மாற்றுகதில்லயாமே
தோற்கதில்லவென்றடமென்றோளே"

என்னும் ஐங்குறுநூற்றுச்செய்யுளில், தலைமகன் பரத்தையர்க்குச் சிறப்புச்செய்கின்றானென்பதுணர்ந்ததலைமகள் வாயிலாய்வந்தார்க்கு அதனை வெளிப்படக்கூறாது, கரைமருங்குநிற்கும்வேழம் வயலகத்து விளைக்குந்தீங்கரும்புபோலப்பொலியுமூரன் என்றுகூறி, அந்நாற் பெர்துமகளிர்க்குக் குலமகளிரைப்போற்சிறப்புச்செய்கிற்பான்தலைவ னென்பதுணரவைத்தாள்; இஃது துள்ளுறையுவமமாதல்காண்க.

இனி, இவ்வுள்ளுறையுவமமும் ஏனையுவமம்போன்று சிறப்பு, நலன், வலி, காதல், இழிபென்னுமைந்தனையும் நிலைக்களனாக்கொள்ளும். ஏனையுவமத்திற்குப் பொதுவியல்பு, வினை பயன் மெய் உரு என்றநான்கு

மாக, உள்ளுறைக்கு அவற்றோடு சாதியுஞ்சேர்ந்து ஐந்தாகும். இங்ஙனம் ஐந்துநிலைக்களத்தும் ஐந்துதன்மையானுந்தோன்றும் உள்ளுறையுவமந்தான் எண்வகைமெய்ப்பாடுந்தோற்றுவித்துத் தனித்தனியும் விரவியும்வரும்விகற்பமெல்லாம் இறப்பப்பலவாம். அவற்றுக்கெல்லாம் உதாரணங்காட்டிவிளக்கப்புகின் வரம்பின்றிப்பெருகுமென்க.

இனி, ஆசிரியர்தொல்காப்பியனார் உள்ளுறையை உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐவகைப்படுத்துரைத்தார். அவற்றுளொன்றாகிய உவமமே உள்ளுறையுவமமென இதுகாறும்விளக்கப்பட்டது. ஏனையநான்கனுளொன்றாகிய உடனுறையென்பதனையும் ஈண்டு இன்றியமையாமைபற்றிச் சிறிதுவிளக்கிமுடிப்பாம். உடனுறையென்பதற்கு "நான்குநிலத்துமுளவாய் அந்நிலத்து உடனுறையுங் கருப்பொருளாற் பிறிதொன்றுபயப்ப மறைத்துக்கூறும் இறைச்சியும்" எனப் பொருள்கூறினர் நச்சினார்க்கினியர். இதனால் உடனுறையென்பது நிலத்துடனுறையுங்காரணத்தாற் கருப்பொருட்காயிற்று என்பது பெறப்படுகின்றது. கருப்பொருளெனினும் இறைச்சியெனினும் ஒக்கும். தொல்காப்பியத்துப் பலவிடத்தும் இறைச்சியென்னுஞ் சொல்லுக்குக் கருப்பொருளென்றே எல்லாவுரைகாரரும் பொருள் கூறினர். இங்கு இறைச்சியெனப்படும் கருப்பொருளாற்பிறப்பதனையிறைச்சியென்றார்.

"இறைச்சிதானே பொருட்புறத்ததுவே" "இறைச்சியிற் பிறக்கும்பொருளுமாருளவே—திறத்தியன்மருங்கிற்றெரியுமோர்க்கே" என்னுஞ்சூத்திரங்கள் இறைச்சிக்கு இலக்கணங்கூறவந்தவாம். இவ்விருசூத்திரத்தானும் இறைச்சியை இருவகைப்படுத்துரைத்து உதாரணங்காட்டினர் ஆசிரியர்நச்சினார்க்கினியர். இன்னோரன்னபொருட்டிறங்களில் அவருரையின்றி யாமறியற்பாலதொன்றின்மையின் அவ்வுரைக்கருத்தையே இங்குக்கூறுகின்றேன். முதற்சூத்திரக்கருத்து, கூறவேண்டியபொருளைத் தலைமையாக வெளிப்படக்கூறாது வேறு பொருளினடக்கிக்கூறுதலாம். "இலங்குமருவித்திலங்குமருவித்து—வானினிலங்குமருவித்தேதானுற்ற—சூள்பேணான்பொய்த்தான்மலை" என்னுமிதில், சூள்பொய்த்தானென்பதே கூறவேண்டும்பொருள். அதனைத்தலைமையாகக்கூறாது, மலை விளங்குமருவியையுடையதென்னும் பிறிதுபொருளாகியகருப்பொருள்கூறுமுகத்தான்மறைத்துக்கூறினமையின் இறைச்சியாயிற்று. சூள்பொய்த்தானென்பது ஒருவாற்றான் மறைக்கப்பட்டமையின் உள்ளுறையிலடக்கினார்.

இரண்டாஞ்சூத்திரக்கருத்து, உள்ளுறையுவமம்போன்றே கருப்பொருளைநிலனாக்கொண்டுதோன்றும்பொருளென்பதாம். ஆயின், உள்ளுறையுவமத்திற்கும் இதற்கும் வேறுபாடென்னையெனின், உள்ளுறையுவமம், கூறவேண்டியபொருளைச் சிறிதும் புலப்படக்கூறாது முழுதும் உவமையாற்பெறவைத்தல். இறைச்சி, கூறவேண்டியபொருளைப் புலப்படக்கூறி, அதன்புறத்தேகூறுங்கருப்பொருளால் வேறுபொருளுந்தோன்றச்செய்தல். 'கன்று பாலுண்ணுமாறு பிடி தினையையுண்ணும்நாடனே! நீ இரந்துதுயருற்றகாலத்து நான் இவளை நின்னொடுசேர்த்தநன்றியைமறவாது இன்று நீ இவளைவரைந்துகொள்ளல் வேண்டும்; என்னுங்கருத்துள்ளசெய்யுள் இறைச்சிக்குதாரணமாகும். இதில் நாடனேயென்பதில் நீ நின்கருமஞ்சிதையாமற்பார்த்து எமக்குயிராகிய இவளைத்துயருறுத்தி யெம்மை இறந்துபடுவித்தல் ஆகாது என்று உள்ளுறையுவமமெய்திற்றேனும் கூறவேண்டியபொருளைப் பின்னர் வெளிப்படக்கூறியிருத்தலின் இது இறைச்சியாயிற்று.

"ஏற்றவளைவரிசிலையோனியம்பாமுனிகலரக்கி
சேற்றவளைதன்கணவனருகிருப்பச்சினந்திருகிச்
சூற்றவளைநீருழக்குந்துறைகெழுநீர்வளநாடா
மாற்றவளைக்கண்டக்காலழலாதோமனமென்றாள்"

என்னும் இராமாயணச்செய்யுள் இறைச்சிபோற்றோன்றினும் இறைச்சிக்கு நச்சினார்க்கினியர்கூறிய இலக்கணத்தில் ஒன்றேனும் முற்றுமமையப்பெறாமையானும், அகனைந்திணைக்கேலாமையானும் இறைச்சியாகாதென்க. இறைச்சி பெரும்பாலும் தலைவன்கொடுமைகூறும்வழிப் பிறக்கும். கருப்பொருள்களில் உள்ளுறையுவமத்திற்குவிலக்கிய 'தெய்வம்' இறைச்சிக்கண்வருதலுண்டு. மற்றும் இதனியல்பெல்லாம் புலனெறிவழக்குப்பற்றியுணர்ந்துகொள்ளற்பாலன. இதுகாறுங்கூறியவாற்றால், பிறர் அலங்காரமுதலியபெயர்களால் விரித்துக்கூறிய பரந்துபட்டபொருளையெல்லாம் அவரினும் முன்னரறிந்து உவமவிலக்கணத்தாற் சுருங்க விளங்கவுரைத்தருளிய ஆசிரியர்தொல்காப்பியனாரது பேரருட்புலமையே புலமையாகக்கண்டாமென்க.

வாழியதமிழ்சேர்நாடுமென்னவர்மக்களெல்லாம்
வாழியதமிழ்சேர்சங்கம்தலைவர்கள்மதிவல்லோர்கள்
வாழியதமிழென்றேத்தவயங்கிடுமெமதுதாயே
வாழியஇராமநாதன்மன்னுயிர்க்கருளுமாறே.

---

மு. வேங்கடசாமிநாட்டார்.

ஸ்ரீ

# திருக்கோளூர்ச்சாசனங்கள்.

"செந்தமிழ்" (தொகுதி கஉ பகுதி எ-ல்) உசுஎ-ம்பக்கத் தொடர்ச்சி.

## சுவாமி வைத்தமாநிதியின்கர்ப்பகிருஹம், பின்புறம்.

காலம்:—மாறவர்மன்சுந்தரபாண்டியனின் 20-வது ஸூ.

விஷயம்:—ஷை அரசன், தான்பிறந்த பங்குனியவிட்டநக்ஷத்திரத்தில் ஷை சுவாமி தீர்த்தம்ப்ரஸாதிக்கும்படி உத்ஸவம் ஏற்படுத்தி, அதற்காக நிலம்விட்டது.

குறிப்பு:—ஷை அரசன், மாடக்குளக்கீழ்மதுரையரமனையில் 'மழவராய'னென்னும் பள்ளிப்பீடத்தில்வீற்றிருக்கும்போது திருக்கோளூர் ஸ்ரீவைஷ்ணவரும் நம்புசெய்வானும்வேண்டிக்கொண்டபடி இச்சாசனம் கட்டளையிடப்பட்டது. இக்காலத்தில், அடுக்களைப்பிராமணரில் சீராமதேவனென்னும் பெயருடையபெரியநம்பி, (பெரிய அர்ச்சகன்) 'கு(லே)லசேகரவ்யூஹாதராயன்' (இது இந்தவிடத்தில், கோயில் ஸ்தாநீகத்துக்குரிய பட்டப்பெயராகத்தோன்றுகிறது. இப்பட்டமுடையார்க்கு அநேககோயில்களில் பாத்தியதை ஏற்பட்டிருந்திருக்கிறது) என்னும் பட்டத்துக் குரியவனுயிருந்தான். 32-வதுவரியில் கையொப்பக்காரரில் 'கங்கைகொண்டானை சுந்தரபாண்டியவாணராயன்' என்று வருவதுகொண்டு ஒரு சார்வபௌமசுந்தரபாண்டியன் 'கங்கைநாடு' என்று பேர்கொண்டிருந்தநாட்டையாவது கங்காதீரநாட்டையாவது ஜயித்திருக்கவேண்டுமென்றுதோன்றுகிறது. பல்லவராயன், களப்பாதராயன், வாணுதிராயன், விசையராயன், கங்கைராயன், விழுப்பாதராயன், காளிங்கராயன், சீனத்தரையன், முனையதரையன், தொண்டைமான் என்னும் பட்டந்தரித்தபிரபுக்கள் இச்சாசனகாலத்தில் இருந்தனர். 'பொன்பற்றியுடையான்' என்னும் தொடர் (வரி 32, 33) ஊர்ப்பெயர்களையடுத்து இந்நாட்டுச்சாசனங்களிலும் மலைநாட்டுச்சாசனங்களிலும்பயின்றுவருதலால், அவ்வவ்வூர்களில் 'ஒரு குறிப்பிட்ட பாத்தியதைக்குரியவன்' என்னும் அர்த்தத்தில் அது பிரயோகிக்கப்பெற்றதாக ஊகிக்கவேண்டியிருக்கிறது. முன் இறையிலியாயிருந்தநிலங்கள் இப்போதும் 'இறையிலி' யென்ற

பெயரால்வழங்குவதுபோலச் சிலநிலங்கள் அல்லது ஊர்கள் இப்போது 'பொன்பற்றி'யென்றபெயரால் வழங்குகிறது. (வீரசோ-க-பா) 18-வது வரியில் 'உலகமுழுதுடையார்' என்றுவந்திருக்கிறது. இதற்கும் இதன் பரியாயங்களாய 'புவனிமுழுதுடையார்' 'அவனிமுழுதுடையார்' என்பவைகளுக்கும் 'ராணி' என்றுபொருள். இத்தொடர், சோழசாசனங்களிலும் பாண்டியசாசனங்களிலும், இப்பொதுப்பொருளிற் பயின்றுள்ளது. வைகாசிமாதத்துச் செந்தமிழ் உசுகூ-ம் பக்கத்தில் 'புவனிமுழுதுடையார் குலோத்துங்கன்பட்டமஹிஷி' என்றெழுதியிருப்பது சந்தேகத்துக்கிடமாயிருக்கிறது. இதில் ஒன்றுமுதல் எட்டுவரை லக்கம்வரும்படி பாடியிருப்பதை (வரி 2-ல்) 'பிஷப்கால்ட்வெல்' தம்முடைய 'திராவிடபாஷாதாரதம்மியஇலக்கணம்' இரண்டாவதுபதிப்பு முகவுரை பக்கம் 142-ல் பிரஸ்தாபித்திருக்கிறார். (ஆனால் அவர் அதன் கருத்தை நன்குயறிந்துகொள்ளவில்லை) பகைவர்நாட்டையழித்துக் கழுதையால் உழுது, கவடிவிதைக்கும் பழையவழக்கம் இவ்வரசன் காலத்திலுமிருந்ததென்று 5-வதுவரியால் தெரிகிறது. 'இந்திரன் பூட்டிய, பொலங்கதிராரமார்பினிற்பொலிய' (வரி 3) என்பதை 'செங்கணுயிரத்தோன்றிறல்விளங்காரம், பொங்கொளிமார்பிற்பூண்டோன் வாழி' என்னும் சிலப்பதிகாரத்தோடு ஒப்பிடுக.

மாறவர்மன்சுந்தரபாண்டியன், புலிக்கொடியும் விற்கொடியும் தாழும்படி தன்கயற்கொடியையுயர்த்தி(வரி 1) தஞ்சையையு முறந்தையையுஞ் செந்தழல்கொளுத்தி(வரி 4) சோழனைவென்று காட்டிற்குத்துரத்தி, 'ஆயிரத்தளி'யென்னுமிடத்திற் சோழனபிஷேகமண்டபத்தில் வீராபிஷேகஞ்செய்துகொண்டு, பரராசநாமத்தலைபிடுங்கி (பரராசனென்பவனைக்கொன்று?) (வரி 5) சிதம்பரத்திற்குச்சென்று தொழுது (வரி 6) மணிமண்டபத்திருந்தகாலையில், தோற்றோடினசோழன், மனைவிமக்களுடன் திரும்பவந்து குறையிரக்க, சோழனுக்கு 'சோழபதி'யென்னும்பட்டமும் முடியும் வழங்கி(வரி 8, 9) தம்முட்பிணங்கி வந்துவணங்கிய தென்கொங்கர் வடகொங்கர்களுடன் மதுரைக்குட்சென்று அவர்கள்நாட்டிற்கு எல்லையறுத்துப் பயமுறுத்திச் சமாதானப்படுத்தியனுப்பி(வரி 10, 12) வாழாநிற்கையில், முடிபெற்றசோழன் திரும்பவும் முரணி, சேனையுடன் படையெடுத்துவர அவனைக்கொன்று செயத்தம்பநாட்டி 'முடிகொண்டசோழபுரி'யில் திரும்பவும் விஜயா

பிஷேகஞ்செய்தருளி(வரி 13) வடகு (பு?)லிவேந்தர்சிலரைவென்று சோணாடுகோண்டு முடிகோண்டசோழபுரியில் வீராபிஷேகம்பண்ணிய என்ற பிருதுகைக்கொண்டு மிகுந்தசிறப்புடன்விளங்கினான்.

சாசனம் IX. (மெய்க்கீர்த்தி)

(1) ஸ்வஸ்திஸ்ரீ
பூமருவியதிருமடந்தையும்புவிமடந்தையும்புயத்திருப்ப
நாமருவியகலைம(ட)ந்தையுஞ்செயமடந்தையுநலஞ்சிறப்ப
கோளா(ர்)ந்தசினப்புலியுங்கொ(டு)டிஞ்சிலையுங்குலந்தொப்ப(?)
வாளார்ந்தபொற்கிரிமேல்வரிக்கயல்கள்விளையாட
விருங்கடல்வலயத்தினிதறம்பெருக
கருங்கலிகடிந்துசெங்கோல்நடப்ப
(2)ஒருகுடைநீழலிருநிலங்குளிர
மூவகைத்தமிழுமுறைமையில்விளங்க
நால்வகைவேதமும்நவினவடனவழா(?)
ஐவவகைவேள்வியுஞ்செய்வினையியற்ற
அறுவகைச்சமயமுமழகுடன்திகழ
வேழ்வகைப்பாடலுமியலுடன்பரவ
எண்டிசையளவுஞ்சக்கரஞ்செல்லக்
கொங்கணர்கலிங்கர்கோ(3)சலமாளுவர்
சிங்களர்தெலிங்கர்சீனகுச்சரர்
வில்லவர்மகதர்விக்கலர்செம்பியர்
பல்லவர்முதலியபார்த்திவரெல்லா
முறைவிடமருளென்றொருவர்முன்னொருவர்
முறை(செ)கடவத(தி)-(?)திறைகுணர்ந்திறைஞ்ச
இலங்கொளிமணிமுடிஇந்திரன்பூட்டிய
பொலங்கதிராரமார்பினிற்பொலியப்
பனிமலர்த்தாமரைத்திசைமுகன்படைத்த
மனுநெறிதழைப்ப(4)மணிமுடிசூடிப்
பொன்னிசூழ்நாட்டுப்புலியாணைபோயகலக்
கன்னிசூழ்நாட்டுக்கயலாணைகைவளர
வெஞ்சினவிவுளியுமீவேழமும்பரப்பித்
தஞ்சையுமுறந்தையுஞ்செந்தழல்கொளுத்திக்

காவியுநீலமுநின்றுகவினிழ(க்க)ற்ற
வாவியுமாறுமணிநீர்நலனழித்துக்
கூடமுமாமதிளுங்கோபுரமுமாடரங்கு
மாடமுமாளிகையுமண்டபமும்பலவிடித்து
தொழுதுவந்தடை(5)யாநிருபர்தநடுதாகையர்(?)
அழுதகண்ணும்நிராவபபநிக்(?)
கழுதைகோடுழுதுகவடிவிச்சச்
செம்பியனைச்சினமிரியப்பொருதுசுரம்புகவோட்டிப்
பைம்பொன்மணிமுடிதரித்துப்பாணனுக்குக்கொடுத்தருளிப்
பாடருஞ்சிறப்பிற்பரு(வி)திவான்ருேயு
மாடகப்புரிசையாயிரத்தளியிற்
சேராவளவனபிஷேகமண்டபத்து
வீராபிஷேகஞ்செய்துபுகழ்விரித்து
நாடும்பரராசநாமத்தலைபிடுங்(6)கி
மூடுந்தறுகண்மத(சா)யானைமேல்கொண்டு
நீராழிவையமுழுதும்பொதுவொழித்த
கூராழியுஞ்செய்யதோளுமேகொண்டு
பொ-ஜெய்யப்படர்த(?)வருமறைசேரந்தணர்வாழ்
தெய்வப்புலியூர்த்திருவெல்லையிற்புக்கு
பொன்னம்பலம்பொலியஆடுவாமுவை(மை)யொடு
மன்னும்திருமேனிகண்டுமனங்களித்து
கோலமலர்மேல்அயனும்குளிர்துழாய்
மாலும்(7)அறியாமலர்ச்சேவடிவணங்கி
வாங்குசிறையன்னந்துயிலொழியஉண்டெழுப்பு(?)
மழுங்கமலவாவிகும்பொன்னமரர்பதியு
ளொத்துகனந்தங்கும்கமேருவைக்கொணர்ந்து
வைத்தனையசோதிமணிமண்டபத்திருந்து
சோலைமலிபழநற்கொண்டுதான்முந்த
மாலைமுடியுந்தான......முகவென்(8)றழைப்பி
மாநதலைகுலையவாழகா(?)க்கப்புறத்து
போனவளவனுரிமையொடும்தான்புகுந்து
பெற்றபுதல்வனைநின்பே(ரெ)றென்றுமுன்காட்டி

வெற்றியரியணைக்கீழ்வீழ்ந்துதொழுதிரப்பக்
காஞேடிமுன்னிழந்தவெம்மைஎல்லாம்கையகலத்
தாஞேதகம்பண்ணிதண்டர்(9)ர்முடியுட்டெ
விட்டபுகலிடந்தனமராவேளைக்குத்தரிய(?)
மிட்டபடிக்கென்றுமிதுபிடிபாடாகவெனப்
பொங்குதரைஞாலத்துப்பூபாலர்கோவிளங்குஞ்
செங்கயல்கொண்டுநறுந்திருமுகமும்பண்டிமுந்த
சோழபதியென்னுநாமமும்தோன்னகரும்
மீளவழங்கிவிடைகொடுத்துவிட்டரு(10)ளி
ஓதக்கடற்பாரில்வேந்தர்கிளைக்குற்ற
வேதந்(எதிர்க்குந்)தவிர்க்குங்கடவுளிவனென்றுஎண்ணிக
களையுற்றிடையாதாரதண்டவிடையின(?)
கிளையுற்றனமுழுதுங்கேட்டருளென்றேத்தி
வணங்கும்வடகோங்கன்சிறைமீளவண்டின்
கணங்கொ(ள்)திருத்தோள்மாலைகழித்தெலவழ(ங்)கி
அயபினமற்றொருநாபறுூர்(?)
முழங்குமுரசற்கடற்றனைமுன்புகுந்தே
கண்கள்போலுங்கிளைதழைத்ததென்றணைக்கீழ்த்
தென்கோங்கன்வந்திட்டதெண்டனுக்குமின்(?)பொங்கச்
சாத்தியவாபரணந்தக்கதெனவழங்கி
ஆர்த்தபெருநண்பின்சிறையுமிட்டுத்
திருமாலும்நான்முகனும்சேவிப்பசெங்கட்
கருமால்களிற்றி(12)ல்வருமுக்கட்கடவுளென
மாடமதுரையிற்றம்போந்துபவனியிலே
கூடவிருகொங்கரையுங்கும்பிடுகொண்டுஅவர்தந்த
தொ(ல்)லைப்புவிக்குப்பிணங்காமற்றுன்சொன்ன
எல்லைக்கண்நிற்பஇசைவுதிமேற்பக்கொண்டு
இவ்வாறுசெய்யாதொழியில்யமனுக்கு
வெவ்வேல்விருந்துகருதும்மையெனவிட்டருள
முன்னமக்குமுடிவழங்குஞ்சேவடிக்கழ
னனம்வழிடுவமென்றுதுபிஞெருநாள்
காவலெனதுபொன்னாடெனுங்களியா

லேவல்எதிர்கொள்ளாதிரைமறுத்தசென்னிவிடுத்த
தூசியும்பேரணியுமொக்கச்சுருண்டொதுங்க
வாசியும்வாரணமுந்தெழுமதற்குவக்
காலாளும்வெட்டுண்ணக்கண்டுபயங்கைக்கொ(14)ண்டு
வேலாவலையத்துவீழ்ந்தவன்போய்மெய்நடுங்க
அம்புருந்தும்மாகத்தடல்மஅக்கனததிலி
யானையின்வெண்மருப்புங்கையுங்குறைத்துளங்கள்
மீனவர்க்குப்பாகுட்டமாமென்றுதம்வீரர்கொள
மாகமுகடுதடவிமழைதடுக்குங்
காகநெடும்பந்தற்கவந்தத்திருடலுங்
கூகையின்பாடலுங்கண்டும்கேட்டுங்களித்திட்
டேலக்கரு(15)ங்கூந்தல்வேள்வியிற்றுச்செவ்வாய்ப்பொற்
சூலக்கைவல்லிபலிகொள்ளவாழ்த்தி
வென்றுபகையின்மிகையொழியவேந்தலறக்
கொன்றும்சினந்தணியாக்கொற்றநெடுவாளூரி
செங்குருதிநாரற்றெளிசெய்துதெஃகுபுலத்து
வெண்கவடிவித்திவீரமுழுதெடுத்துப்
பாடும்பரணிதராரிவேந்தர்கேட்பிக்க
ஆடுந்திருமஞ்சனநீரில்மண்குளிர
வாங்கவன(16)கட்டணத்துக்கற்புட்டமக்காணா
வோங்குமுரிமைக்குழாம்மொருங்குக்கைக்கொண்டு
மூரிமணிப்பட்டகட்டிசூட்டி
மார்பில்அணைத்துவளவன்முதற்தேதி(வி)எனப்
பேர்கொடுத்தவஞ்சிமுதலாயபெய்வளையார்
யோங்குபுனற்கும்பமுதலாப்புலவர்புகழ்
மங்கலங்கள்எட்டும்மணிக்கைத்தலத்தேந்திக்
கொடிகொண்டநெற்றிட்டிற்றகோபுரஞ்(17)சூழ்
முடிகொண்டசோழபுரிமண்டபத்துப்புக்குத்
திசைதொறுஞ்செம்பொற்செ(ய)ற்றம்(த்தம்)பநாட்டி
விஜையாபிஷேகம்பண்ணிஅருள்செய்து
வாகைக்கதிர்வேல்வடவேந்தர்தம்பாத
மேற்றதளையலையவீரக்கழலணிந்து

விளங்கியல்மணியணிவீரஸிம்ஹாஸந(த்)து
வளங்கெழுகவரிஇருமருங்கசைப்ப
கடலெனமுழங்குகளிநலியா(18)னை
வடகுலவேந்தர்தமணிப்புயம்பிரியா
திலகுகுழைஅரிவையர்தொழுதுநின்றேத்து
முலகமுழுதுடையாரொடும்வீற்றிருந்தருளி(ய)

(இனி உரைநடை).

சீகோமாறபன்மரானதிரிபுவனசக்கரவ(ர்)த்திகள் சோணாடுகொண்டு முடிகொண்டசோழபுரத்து வீராபிஷேகம்பண்ணியருளிய ஸ்ரீஸுந்தர பாண்டியதேவர்(க்)குயாண்டு உய—ாது (நாள்?) ௩௰௭ல் மதுரோதய வளநாட்டு மாட(க்)குளக்கீழ்மதுரைக்கோயில் பள்ளியறை(க்)கூடத்துப் பள்ளிப்பீடமழவராயனில் எழுந்தருளியிருந்து திருவழுதிவளநாட்டுத் திருக்கோளூர்ப்பள்ளிகொண்டருளின பரமஸ்வாமிகள்கோயில் சீவைஷ்ணவரும் நம்புசெய்வானும் செய்யதிருவாய்மொழிந்தருளினபடி இப் பரமஸ்வாமிகளுக்கு இப்பங்குனிமாத(20)த்திலே திருநாளெழுந்தருளி நாம்பிறந்தஅவிட்டத்துநாளிலே தீர்த்தம்ப்ரஸாதித்தருளத் திருப் படிமாற்றுள்ளு(ளிட்டு)வேண்டும் நிவந்தங்களுக்கு இப்பரமஸ்வாமிகளுக்கு காராண்மைஉட்ப(ட)த்தேவதானஇறையிலியான அமுதகுண வளநாட்டு வல்லக்குளம் அடுக்களைபிராமணரில் நாலூர்ச் சீராமதேவன் பெரியநம்பியான குலே(21)சேகரப்ரஹ்மாதரா(ய)னுக்கு காராண்மை கொடுத்து இவன் அநுபவித்துப்போந்தமையில் இவனைத்தவிர்த்து இக்குளம் நான்கெல்லைக்குட்பட்டநீர்நிலமும்கருஞ்செய்புன்செயும் உட் பட்ட இருபதாவ்தின்எதிராமாண்டின் எதிராமாண்டுமுதல் காராண்மை மீயாட்சியும் அந்தராயமும் விநியோகமும்தருவதான அச்சும் காரிய வாராய்ச்சியும் வெட்டிபாட்டமும் பஞ்சுபீலிசந்துவிக்கிரகப்பேறும் மற்றும் எப்பேர்ப்பட்டனவும் உள்பட தேவதானஇறையிலியாக இடப் பெறவேணுமென்று ம(ழ)வராயர்நமக்குச்சொன்னமையில் இப்பரம ஸ்வாமிகளுக்கு பங்குனிமாசத்திலே திருநாளெழுந்தருளி நாம்பிறந்த அவிட்டத்துநாளிலே தீர்த்த(23)ம்ப்ரஸாதித்தருள திருப்படிமாற்றுள் ளிட்டுவேண்டும்நிவந்தங்களுக்கு இவ்வல்லக்குளம்நான்கெல்லைக்குட் பட்டநீர்நிலமும் கருஞ்செய்புஞ்செய்யும் உள்பட்டநிலம் இவ்வாண்டு

முதல் காராண்மைமீயாட்சியும் அந்தராயமும் வினியோகமும்தருவ தான அச்சும் காரியவாராய்ச்சியும் வெட்டிபாட்டமும் பஞ்சுபீலிசந்து விக்கிரகப்பே(24)றும் மற்றும்எப்பேர்ப்பட்டனவும்உட்பட தேவதான இறையிலியாகஇட்டு வரியிலாரெழுத்திட்ட உள்வரியும் ஓலையும்தரச் சொன்னோம் கைக்கொண்டு திருநாளெழுந்தருளப்பணி இப்படிச் சந்தி ராதித்தவற்செ(ல்)வதாகக் கல்லிலும் செம்பிலும்வெட்டுவித்துக் கொள்கவென்று திருவாய்மொழிந்தருளினார். இவை திருமல்விநாட்டுத் தடங்கண்ணி(25)ச்சிற்றூருடையான்சொறஉய்யநின்றுடுவானான குரு குலத்தரசன்எழுத்து. இவை மிழலைக்கூற்றத்து கீழ்கூற்று வெட்சியூ ரானமும்முடிசோழநல்லூர் வெபது(பூரு?)டையான் அரையன் சீவல்ல வனான மாதவராயன்எழுத்து. இவை சேவிருக்கைநாட்டு சக்க(ர) பாணிநல்லூர்அரையன்விரதமுடிச்சானானபல்லவராயன்எழுத்து. உள் வரி. திருவழுதிவளநாட்டு திருக்கோளூர்ப்(26)பள்ளிகொண்டருளிய பரமஸ்வாமிகள்பங்குனிமாதத்திலே திருநாளெழுந்தருளி அவிட்டத்து நாளி(லே)தீர்த்தவாரித்தருளத் திருப்படிமாற்றுள்ளிட்டு வேண் டும் நிமந்தங்களுக்கு இருபதாவதின் எதிராமாண்டின் எதிராமாண்டு முதல் காராண்மைமீயாட்சியும் அந்தராயவினியோகமும் கற்பூரவிலை காரியவாராட்சியும்வெட்டிபாட்டமு(ம்)(27)பஞ்சுபீலிசந்திவிக்க(ர)மப் பேறும் மற்றும்எப்பேர்ப்பட்டனவும்உட்பட தேவதானஇறையிலியாக இப்பரமஸ்வா(மி)களுக்கு காராண்மை உட்பட தேவதானஇறையிலி யான அமுதகுணவளநாட்டு வல்லக்குளம்—நாலூர் சீராமதேவன் பெரியநம்பியான குலசேகரப்ரம்மாதராயனுக்கு காராண்மைகொடு த்து இவன்அனுபவித்து(28)ப்போந்தமையில் இவனைத்தவிர்த்து இக் குளநான்கெல்லைக்குள்பட்ட நீர்நிலமும் கருஞ்செய்புன்செயும் உட்பட இவ்வாண்டுமுதல் காராண்மைமீயாட்சியும் அந்தராயமும் விநியோக மும் கற்பூரவிலையும் காரியவாராட்சியும் வெட்டிபாட்டமும் பஞ்சுபீலி சந்திவிக்கரமபேறும் மற்றும்எப்பேர்ப்பட்டனவும்உட்படத் தேவதான இறையிலியாகஇட்ட(29)மைக்கு இவை புறவரி திணைக்களநாயக(ம்) மிழலைக்கு(கூ)ற்றத்துவடபாம்பாற்று கண்ணிரண்டக்குடியான தரணி விச்சாதிநல்லூர் அண்டக்குடையான் தேவப்பிரான் அழகியமணவாள னான குருகுலராயன்எழுத்தென்று. இவை புறவரிதிணைக்களநாயக மிழலைக்கூற்றத்து நடுவிற்கூற்று சீபராந்தகநல்லூர் கட்டிகுறிச்சிஉடை

யான் அரையன்நாராயணனான சீன(30)த்தரயன்எழுத்தென்று. இவை
வெண்பைக்கம்நாட்டுக் காவனூர்விரதமுடித்தபெருமாளான வேணு
வுடையானெழுத்தென்று. இவை மிழலைக்கு(கூ)ற்றத்து நடுவிற்கூற்று
பாயிலிமங்கலத்து பனையூருடையான் பரஞ்சோதிசீராமனானஇராரா(?)
விழுப்பாதராயனெழுத்து. இவை மிழலைக்கூற்றத்து கீழ்க்கூற்று
தச்சனூருடையா னருளாளன்செவக்கதேவனான வா(31)ணாயா(யி)
ராயன்எழுத்துஎன்று. இவை புறவரிதிணைக்களநாயக மிழலைக்கூற்
றத்து நடுவிற்கூற்று விளத்தூருடையான் ஆகோமல்லி(?)குலாந்தகநல்
லூர் தேவன்செந்தாமரைக்கண்ணனானதிபரமனெழுத்தென்று. இவை
வடதலைசெம்பிநாட்டு ஆக்கு(ரு)டையான் சீவல்லவனான அழகியா
னான காளிங்கராயனெழுத்தினாலும் இவை வேணலைக்குடிநாட்டு
கோமானூருடையா(32)ன் கெங்கைகொண்டானான சுந்தரபாண்டிய
வாணராயன்எழுத்துஎன்று. இவை கருங்குடிநாட்டுக் கீழ்நெட்டூரான
கீர்த்திவிசாலயநல்லூர் கரியமாலகனான களப்பாதராயன்எழுத்தென்று.
இவை புறவரிதிணைக்களநாயக மிழலைக்கூற்றத்து கீழ்கூற்று செய்யான
மானபராக்கிரமபாண்டியநல்லூர் பொன்பற்றியுடையான் திருவரங்க
தேவன்சோலைமலைநின்றான்விசையனான(33)னெழுத்தென்று. இவை
மிழலைக்கூற்றத்துநடுவிற்கூற்றத்துபுல்லூர்க்குடி பொன்பற்றியுடையான்
விரதமுடித்தானானமுனையதரையனெழுத்தென்று. இவை திருவழுதி
வளநாட்டுத் திருக்கோளூர்துஞ்சலூருடையான் அழகியமணவாளன்
சிங்கப்பிரானான விசையராயனெழுத்தினாலும். இவை கருங்குடிநாட்டு
கீழ்நெட்டூரான கீர்த்திவிசாலையநல்லூர் நக்கன்ரெட்டை(34)யான
தொண்டைமானெழுத்தினாலும். இவை மிழலைக்கூற்றத்துக் கீழ்கூற்று
செய்யான் மானபராக்கிரமபாண்டியநல்லூர் பொன்பற்றியுடையான்
திருவரங்கதேவனான காங்கையராயனெழுத்தினாலும். இவை மிழலைக்
கூற்றத்துநடுவிற்கூற்று புல்லூர்க்குடி பொன்பற்றியுடை(யா)னமெர்ண்
ணைப்பிரான் அழகப்பெருமாளான விழுப்பாதராயனெழுத்தினாலும்.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIB
NOV 19.5

A. M. சடகோபராமாநுஜாசாரியன்.
நேஷனல்ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

# திருமலை நாயக்கர் 1623–1659 கி: பி.

## (மதுரைச்சரித்திரத்தின் ஒருபகுதி.)

திருமலைநாயக்கரின்பெயரையறியாதார் இத்தென்னிந்தியாவில் ஒருவருமிரார். அவ்வாறு யாரேனுமிருப்பின் அவர் மதுரையைப் பார்த்துமிரார். அதைப்பற்றிக் கேள்விப்பட்டுமிரார். ஏனெனில், மதுரையிலும் மற்றும்பெரியஸ்தலங்களிலும் திருமலைநாயக்கர் அநேக கட்டிடங்களை அமைப்பித்துள்ளார். இவர் மதுரையையாண்டநாயக்கர்களில் 10-வதுபட்டத்துமன்னர். இவர்பிதாவின்பெயர் **முத்துகிருஷ்ணப்பநாயக்கர்.** அவரிறந்துபோனபிறகு அவரின் ஜேஷ்டபுத்திரரும் திருமலையின்தமையனுமாகிய **முத்துவீரப்பநாயக்கர்** சுமார் 15 வருஷம் அரசாண்டார். அவரிறந்தபின்னர்த் திருமலைநாயக்கர் ராஜ்யபட்டாபிஷேகஞ்செய்துகொண்டார். நாயக்கர் பட்டத்திற்குவந்தது கி. பி. 1623-வது ஆண்டாதலின், இவர் சுமார் இன்றைக்கு 290 வருஷங்களுக்குமுன்னரிருந்தவரென்றுதெரிகிறது.

நாயக்கர் அரசரானதுமுதல் 12 வருஷம்வரை திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக்கொண்டிருந்தார். அதுபோலவே அவருடைய முன்னோர்களும் திருச்சிராப்பள்ளியிலிருந்து ஆண்டுவந்திருக்கிறார்கள். ஆனால் அதற்குப்பிறகு ஒருசமயம் மதுரைக்கு நாயக்கர்வந்துகொண்டிருந்தார். அவ்வாறுவருகையில் அவருக்கு எப்போதுமிருந்தகாசரோகம் மிகவும்வருத்திற்று. ஆனதுபற்றித் தனதுபிரயாணத்தை நிறுத்தித் திண்டுக்கல்லில், தங்கினார். அங்குத்தங்கியிருந்தபோது ஓர் இரவில் மதுரைத்தெய்வங்களாகிய மீனாக்ஷியம்மனும், சோமசுந்தரரும் அவர்சொப்பனத்தில்தோன்றி மதுரையை ராஜதானியாக்கிக்கொண்டு அங்கிருந்து ஆட்சிசெலுத்தினால் அவருடையகாசரோகம்நீங்குமென்றும் அதற்காக அவர்விபூதிப்பிரஸாதத்தை அவர் அணியவேண்டுமென்றும் உத்தரவுகொடுத்து மறைந்தருளினர். உடனே நாயக்கர் விழித்துக்கொண்டு நடந்தவிஷயங்களைப் பக்கத்துள்ளபிராமணர்களிடத்திற்சொன்னார். அவர்கள் தெய்வசித்தம்போலநடக்கவேண்டுமென்றனர். தன்நோய்நீங்கினால் மதுரையிலிருந்து அரசாள்வதோடு லக்ஷம்பவுன்செலவழித்து அங்குத் தேவாராதனைக்குரியகட்டிடங்கள் கட்டுவிப்பதாகவும் நாயக்கர் உறுதிமொழிகூறினார்.

மறுநாட்காலையில் அரசன் பல்விளக்குகையில் அவரிடத்தில் அந் நோய்காணப்படாததால் ஆச்சரியமும் ஆனந்தமுங்கொண்டு அங்கிருந்துபுறப்பட்டு மதுரைக்குவந்துசேர்ந்தார். அதுமுதல் மதுரையிலிருந்தே அரசாண்டார். அவ்வாறு அரசாண்டகாலத்தில்தான் அவர் இனிக்கூறப்பெறுங்கட்டிடங்களைமுடிப்பித்தார்.

வியாபாரம், புராணசம்பந்தம், பலவிடங்களுக்கும்நடுவில்நிற்கும் நிலைமுதலியவற்றால் மதுரைக்குள்ளபெருமையைக்காட்டிலும் நாயக்கரின்கட்டிடங்களாலாகியபெருமை ஒருசிறிதும்தாழ்ந்ததன்றென்று துணிந்துகூறின் அது தவறாகாது.

தென்னிந்தியாமுழுவதிலுஞ்சிறந்தகட்டிடங்கள் மதுரையில் இம் மன்னரால் அமைக்கப்பட்டிருக்கின்றன. தென்னாட்டார் சுமார் 300 வருஷங்களுக்குமுன்னர் அதாவது மேனாட்டாரின்நாகரீகம் அங்குப் பரவுமுன்னர் எவ்வாறு சிற்பசாஸ்திரத்திற்சிறந்திருந்தனரென்பதை இவர்கட்டிடங்கள் நன்குவிளக்கும். இம்மாதிரிக்கட்டிடங்கள் அமைப்பதற்கு முகம்மதியரிடமிருந்து ஆதியில் இந்துக்கள்தெரிந்துகொண்டார்களென்று பர்கூஸன்துரைசொல்லுகிறார். அதற்கு அவர்கூறுமாதாரம் சிறிதும்பொருந்தவில்லை.

மதுரையிலுள்ள நாயக்கரின்கட்டிடங்கள் விஜயநகரத்திலிருந்தவற்றைப்பார்த்தே கட்டப்பட்டிருக்கவேண்டுமென்றுதெரிகிறது. ஏனெனில் மதுரைநாயக்கமன்னரெல்லாம் வெகுகாலமாய் விஜயநகரத்துக்குட்பட்டுப் புவிபுரந்தவர்களாதலால் ஒவ்வொருவிஷயத்திலும் தமது சக்கரவர்த்தியையே அவர்கள் பின்பற்றினார்கள். சக்கரவர்த்தி எவ்வாறு சத்திரம் சாவடிகட்டியும், கிணறு குளங்களைத்தோண்டியும், சாலைபோட்டும் நாட்டிற்குநன்மைபுரிந்தனரோ அதுபோலவே மதுரை நாயக்கர்களும் செய்தனர். இதற்குப் பலஉதாரணங்கள்கூறலாமெனினும் அவை யாவர்க்குந்தெரிந்திருக்குமாதலின் அவற்றை இங்கெழுதுவது அநாவசியமென்று எண்ணுகிறேன். இவ்வாறு அவர்கள் தர்மங்கள்செய்வதை மதிீரமன்னர்பின்பற்றியதுபோலவே கட்டிடங்கள்நிர்மிப்பதையும் பின்பற்றினர். இதற்கு ஒரு உதாரணங் கூறுவேன்.

விஜயநகரத்தில் தமுக்கம்என்றபேரோடு ஒருகட்டிடமிருந்ததாகப் பர்கூஸனும், சுவால் என்பவரும் தமதுநூல்களிற் கூறியுள்ளார்கள். அந்தப்பேருடனே மதுரையிலும் இப்போதிருக்கும் தமுக்கங்கட்டிடங்களுள்ளன. தமுக்கத்தின்விவரத்தை இந்நூலின் பிறிதோரிடத்திற் கூறுவேன். அதனைப்பற்றிக்கூறுமுன் அதைப்பார்க்கிலுஞ்சிறந்த நாயக்கரின்கட்டிடங்களைப்பற்றி ஆராய்வேன்.

## மஹால்.

நாயக்கரின்கட்டிடங்களிற்சிறந்தது மஹால்தான். தூரத்துப் பார்வைக்கு அது மிகச்சிறந்ததாய்க்காணப்படமாட்டாது. அதனுட் சென்றார்க்கு அதன்பெருமை தெளிவாய்விளங்கும். இது மதுரையில் தென்கிழக்குப்பாகத்திலுள்ளது. நாயக்கர்காலத்தில் மதுரை கிழக்கு நோக்கிவிசாலித்துவந்ததென்பதற்கு மஹாலின்நிலை சாக்ஷியாயிருக்கும்.

இம்மஹாலைச்சார்ந்து பலகட்டிடங்களிருந்தனவென்றும், அவை பின்னால் அழிந்தனவென்றும்தெரிகிறது. ஏனெனில், சிறிதுகாலத்திற்குமுன்னர், மஹாலைச்சுற்றி வீடுகள்கட்ட அஸ்திவாரம்தோண்டுகையில், ஆங்குப் பல நிலவறைகளும், நிலவழிகளும் காணப்பட்டன. இவ்வாறு அழிந்திருக்குங்கட்டிடங்கள் எவையென்றும், அவை எத்தன்மையனவென்றும், அவற்றை இயற்றினாரும், அழித்தாரும் யாவரென்றும் நன்குதெரியவில்லை. ஆனால், நாயக்கரின்பேரனாகிய சொக்கநாதநாயக்கர் மதுரைக்கட்டிடங்களையிடித்து அவற்றிலுள்ளபொருள்களால், திருச்சியில் அரமனைகட்டியதாகச்சரித்திரங்கூறும்.

மதுரையிலுள்ள நாயக்கரின்மஹாலைப்பாராதகண்கள், புண்கள் என்றே சொல்லலாம் "நேபிள்ஸ்நகரத்தைப்பார்த்தபிறகு இறந்துபோ" (See Naples and die) என்று மேனாட்டார்சொல்லுவர். அதாவது ஒருமனிதன் சாகுமுன், இத்தாலியாநாட்டிலுள்ள அழகியநகராகிய நேபிள்ஸைப்பார்க்கவேண்டுமென்பதாம். யான்கூறுவதென்னவெனின் இந்நாட்டிற்பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் திருமலையின்மஹாலைப் பார்த்தபிறகுசாகவேண்டுமென்பதுதான். ஏனெனில் நேபிள்ஸைப் பார்த்தவர்களும், மஹாலைப்பார்த்து மிகஆச்சரியப்படுகிறார்களென்றால் இதன்பெருமை எத்தன்மைத்தென்றுபாருங்கள். இப்படிப்பட்ட கட்டிடம் நன்னாடாகியநந்நாட்டிலிருந்தும் அதனைப்பாராதிருந்தால் அது ஊழ்வினையின்பயனாகும்.

இம்மஹாலைத் தன் கண்ணாரப்பாராதஒருவனுக்கு இதைப்பற்றி எவ்வளவுசொன்னாலும் இதன்பெருமையை அவன் அவதானிக்கவே முடியாது. அதன் பிரமாண்டமானதூண்களும், வழுவழுப்பாயும் உயரமாயும் கனமாயுமிருக்கும் சுவர்களும், மேன்மாடத்தின் வில் வளைவும், உறுதியும், இன்னும் அதன் ஒவ்வொருபாகங்களும், எவ்வளவு சிறந்துள்ளன.

மஹாலுக்குள் நுழைந்ததும் அங்கு விசாலமான முற்றம் ஒன்றுண்டு. அம்முற்றத்துக்கு நான்குபக்கங்களிலுமுள்ள கட்டிடங்கள் ஏறக்குறைய ஒரேமாதிரியாயிருக்கின்றன. அம்முற்றத்துக்குமேற்கே ஒரு மண்டபமுள்ளது. அதில் இப்போது இராமநாதபுரம்ஜில்லாகோர்ட் நடைபெறுகிறது. அது மிகவிசித்திரமாய் அமைக்கப்பட்டது. அது அக்காலத்திற் சபாமண்டபமாயிருந்திருக்கலாம். இதற்குத்தெற்கே வியக்கத்தக்கதான பெரியகட்டிடம் ஒன்றிருக்கிறது. சபாமண்டபத்திற்குவடக்கிற்சென்றால் அங்கு ஒரு சிறுவாசலுண்டு. அதன்வழிச் சென்றால் அங்கும் ஒருமண்டபமுண்டு. அதில் இப்போது மதுரைச்சப்கோர்ட்நடைபெறுகிறது.

இங்குக் கூறப்பட்டனவே, மஹாலின்முக்கியபாகங்கள். இனி இவற்றின் மேல்மெத்தைகளைப்பற்றிக்கூறமுடியாது.

மஹாலின்கட்டிடங்கள், உத்திரங்களின்றி வெறுஞ்சுண்ணாம்பாலும் செங்கல்லாலும் அமைக்கப்பட்டுள்ளன. இப்போதுள்ள மஹாலின் அறைகள் நமது துரைத்தனத்தார்களால், கச்சேரிகள்நடத்துவதற்கு அனுகூலமாக மரப்பலகைமுதலியவற்றாலேற்படுத்திக்கொண்டனவாம்.

நாயக்கர்களுக்குப்பின் தேடுவாரற்றிருந்த இம்மஹாலைச் சென்னைக் கவர்னராயிருந்த Lord Napier என்பவர் நன்னிலைப்படுத்தி இப்போதுள்ளநிலைக்குக்கொண்டுவந்தார்.

## புதுமண்டபம்.

இது மதுரைமாநகரின் நடுவண் அமைந்துள்ள மீனாக்ஷியம்மன் கோயிலுக்குக்கீழ்பாலுள்ளது. நாயக்கர்காலத்திற் புதிதாய்க் கட்டப்பட்டதால், புதுமண்டபமென்றும், வசந்தஉற்சவம்நடப்பதால்

வசந்தமண்டபமென்றும் இதற்குப்பெயர்கள்உண்டு. பர்கூஸன்என்பவர் இதை நாயக்கரின்சத்திரம் என்கிறார். சத்திரத்துக்கும், மண்டபத்திற்குமுள்ள வேறுபாடறியாததால் அவர் அதற்கு அவ்வாறு பெயரிட்டனர்போலும்.

இது நீண்ட சதுரவடிவமாய் அமைந்திருக்கிறது. நீளம் 105 அடி; அகலம் 33 அடி. மண்டபத்தைச்சுற்றி நான்குபக்கங்களிலும் தண்ணீர்தேங்கும்படி கல்லால் அகழ்கட்டப்பட்டிருக்கிறது. கிழக்குமேற்காய் இதில் நான்குவரிசைத்தூண்களுண்டு. அவற்றில் மத்தியிலுள்ள இருவரிசைத்தூண்கள்சிலவற்றில் விசுவநாதநாயக்கர்முதல் திருமலைநாயக்கர்வரை மதுரையையாண்டநாயக்கர்களின் உருவங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. வேறுசிலசிலைகள் முன்பக்கத்துத்தூண்களில் மிகுந்தவேலைப்பாட்டுடன் வெகுஅழகாய்ச்செய்யப்பட்டிருக்கின்றன. புருஷஆயுசில் இத்தகையகட்டிடம் முடிக்கமுடியுமோவென்று எண்ணக்கூடியதாய் இது அமைந்திருக்கிறது. ஆனால் 22 வருஷங்களில் 20 லக்ஷம்பொன் செலவில் இது முடிக்கப்பெற்றதாம்.

இதன் மேற்குப்பக்கத்தில் வழுவழுப்பான கருங்கல்லால் ஆகிய ஒரு சிறுமண்டபமுண்டு. மார்கழிமாதம் எண்ணெய்க்காப்புத் திருவிழா இதில் நடைபெறும். வைகாசிமாதத்தில் இதில் வசந்த உற்சவம் நடக்கும். அக்காலங்களில் இது நன்கு அலங்கரிக்கப்படும். திருவிழாஇல்லாதசமயத்தில் இம்மண்டபத்து 3 பத்திகளில், வெளியிலிருக்குமிரண்டிலும் சீட்டி, ஜவுளிக்கடைகளும், தையற்கடைகளும் விசேஷமாய்க்காணப்படும். மத்தியிலுள்ளபத்தி இரும்புக்கம்பிகளால் வேலியிடப்பட்டிருப்பதால் அங்கு எவரும் தமதிஷ்டப்படி செல்ல முடியாது. மண்டபத்துக்கு வடக்கிலும், தெற்கிலுமுள்ள வரிசையான அறைகளிற் புத்தகக்கடைகளும், பாத்திரக்கடைகளும் முறையே வைக்கப்பட்டிருக்கின்றன. சிலசமயங்களில் இதன் நடுப்பத்தியிற் பொதுக்கூட்டங்கள்நடைபெறுகின்றன.

## ராயகோபுரம்.

புதுமண்டபத்துக்குக்கிழக்கிலுள்ள முற்றுப்பெறாதகோபுரமிது. இதற்கு வெண்சுதைதீட்டாதிருப்பதால் இதன் இயற்கையழகு நன்கு தெரிகிறது. இதைப்போன்ற 64 கோபுரங்களுக்கு நாயக்கர் 'ஒரே

முகூர்த்தத்தில் அஸ்திவாரம்போட ஆரம்பித்தாரென்றும், ஒன்றேனும் முடிவுபெறவில்லையென்றும், சரித்திரம்கூறுகிற இப்போது சிலவே ஆங்காங்குக்காணப்படுகின்றன. ஒருவன் காரியத்தில்முயற்சித்தால் " ராயகோபுரத்திற்குஅடிப்போட்ட அவன்செய்கை இருக்கிறதென்றுசொல்லுவார்கள். இது பெறாதது நாயக்கரின்மரணத்தாலோ, அவரிடம் ப தாலோ நிகழ்ந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கக்கூடியதாயிரு

உண்மையிவ்வாறாக, சிலர் இதைப்பற்றிப் பலகதைகள் டார்கள். அவையாவன:—பலபேய்கள் ஒருநாளிரவில் ஒ கோபுரம்கட்ட ஆரம்பித்தனவென்றும், அதுமுடியுமுன் விடிந்ததால் அவை ஓடிவிட்டனவென்றும், அதனால், கட்டி வில்லையென்றும் ஒரு கட்டுக்கதைவழங்குவதுடன், வைத்துக்கட்டியகல்லொன்றில் தேரையொன்றிருந்தமைய கட்டிடத்திற்குபயோகமாகாமையாலும், அக்கல்லையெடுத் கல்லைவைத்துக்கட்ட இயலாமையாலும் முடிவடையவில் இன்னொருகதையும்வழங்குகிறது.

இவ்விருவிருத்தாந்தங்களும் ஆகாயக்கோட்டைகளே விந்தையாயும் பைத்தியகாரத்தனமாயும் இருக்கின்றன. முற்கூறியபடி விடிந்ததால் பேய்கள் ஓடிப்போயிருக்குமா இதுவரையிலுள்ளஇரவுகளில்வந்து திரும்பவும் ஏன்கட்ட பிற்கூறியவாறு தேரையிருந்ததால் மதுரைராயகோபுரம் பெறவில்லையென்றால் ஸ்ரீரங்கத்துக்கோபுரம் ஏன் முற்றுப் ஆதலால் இவைபோன்றவைகளெல்லாம் சோம்பேறிக ளெனவிடுக்க.

## தெப்பக்குளம்.

முற்கூறியவைகளிலும் பெருமையிலும் அழகிலும் குறையாத மற்றொன்றும் மதுரையில் உண்டு. அதுதான் குக்கிழக்கே சுமார் 2 மைல் தூரத்துள்ள தெப்பக்குளம். கோயிலின்பக்கத்திருப்பதால் மாரியம்மன்தெப்பக்குளமென் யூருக்குச்சமீபத்திலிருப்பதால் வண்டியூர்த்தெப்பக்குளமெ பெயர்பெறும். இதுவே தென்னிந்தியாவிலுள்ளகுளங்க

பெரியது. அது 950-அடிநீளமும் அவ்வளவு அகலமுங்கொண்ட சதுரமாயிருக்கிறது. நாயக்கர் மஹால்கட்டுங்கால் அதற்குவேண்டிய செங்கல்களுக்காக ஒருபள்ளம் தோண்டப்பட்டதென்றும் அது மிகப்பெரிய பள்ளமாயிருந்ததால் பின்னர்,தெப்பக்குளமாய்க்கட்டப்பட்டதென்றும் சிலர் சொல்லுகின்றனர். இக்குளத்தைவெட்டுகையில் அகப்பட்ட ஒரு விக்கிரகம் இப்போது மீனாக்ஷிகோயிலிலுள்ள முக்குறுணியரிசிப் பிள்ளையாராம். நிற்க.

குளத்தைச்சுற்றிலும் கைபிடிச்சுவர்கள் கற்களால் எடுக்கப்பட்டிருக்கின்றன. அச்சுவர்களை ஒட்டி இருவர் தாராளமாய்நடந்துசெல்லக்கூடியபாதை கல்லாலாக்கப்பட்டுள்ளது. குளத்தின் நான்குபக்கங்களிலும் அதற்குவேண்டிய படித்துறைகளுண்டு. குளத்தின்நடுவில் தீவுபோன்ற ஒருமேடையுண்டு. அதன் நான்குமூலைகளிலும் நாலு சிறு கோபுரங்களுள்ளன. மத்தியிற் சிறுகோயிலொன்றும் அதற்குமேற் பெரியகோபுரமொன்றுமுண்டு. மேடையின் முற்கூறியஇடங்களைத் தவிர மற்றப்பக்கத்தில் மா, பலா, தென்னை, வாழைமுதலியன பயிராக்கப்பட்டிருக்கின்றன. இத்தடாகத்திற் பிரதிதைமாதமும் பூசநக்ஷத்திரத்தன்று மீனாக்ஷிசுந்தரேசுவரருக்குத் திருவிழாநடக்கும். அது இரவில்நடைபெறுமாதலால், தடாகக்கரைகளிலும் தெப்பத்திலும் கோபுரங்களிலும் தீபங்களும் மத்தாப்புகளும் எரிந்துகொண்டிருக்கும். அது பார்வைக்கு வெகுநேர்த்தியாயிருக்கும்.

அத்திருவிழா நாயக்கரின்ஜென்மநக்ஷத்திரத்தன்று நடைபெற்று வருகிறதாம்.

## தமுக்கம்.

வைகையின்வடகரையிலிருக்கிற **தமுக்கம்** என்பதற்குக் **கோடைகாலவாசஸ்தலமென்று** தெலுங்குபாஷையிற் பொருளாம். கர்னபரம்பரையிற் கேள்விப்படுவதிலிருந்தும் நெல்சன்துரைகூறுவதினின்றும் இந்தத்தமுக்கமும் நாயக்கராற்கட்டப்பட்டதென்றுதெரிகிறது. ஆனால் Ancient Monument Preservation ஆக்டு இதை மங்கம்மாள்கட்டினதாகத் தெரிவிக்கிறது. இதில் இப்போது மதுரை ஜில்லாகலெக்டர்வசிக்கிறார்.

### கோயிற்கட்டிடங்கள்.

மதுரை மீனாக்ஷியம்மன்கோயிலின்சிலபாகங்கள் நாயக்கராற் கட்டப்பட்டன. வேறுசில நன்குபுதிப்பிக்கப்பட்டன. ஆயினும் எவற்றைப் புதிப்பித்தாரென்றும் எவற்றைக் கட்டினாரென்றும் துணிந்துகூற இயலவில்லை. ஆனால், கோபுரங்களை நாயக்கருக்குவெகுகாலத்துக்கு முன்னிருந்தபாண்டியர்கள்கட்டினார்களென்பதற்குத் தகுந்த ஆதாரங்களிருப்பதால், சிலர் தவறாய்க்கூறுமாறுபோல் நாயக்கரால் அவை ஆகியனவன்று என்பது நிச்சயம்.

இப்போதுகூறப்பட்டவையே நாயக்கர் மதுரையிற்சமைப்பித்தன. இவற்றைத்தவிர ஸ்ரீரங்கம் ஸ்ரீவில்லிபுத்தூர்முதலிய நகரங்களிற் பலகட்டிடங்களை அமைத்துள்ளார்.

இதுவரை நாயக்கரின்கட்டிடங்களைப்பற்றிச்சொன்னோம். இனி அவர்புரிந்தசண்டையைப்பற்றிச்சொல்வோம்.

## போர்கள்.

### மைசூர்யுத்தம்.

நாயக்கர் தன்னுடையமுன்னோர்களைப்போல விஜயநகரச்சக்கரவர்த்திக்குட்படாமல் ஆரம்பத்திலிருந்தே நாடாள ஆரம்பித்தார். ஏனெனில் அவர்காலத்து அச்சக்கரவர்த்தி முகம்மதியர்களின் ஹிம்ஸைக்குட்பட்டிருந்ததால் அவரது செல்வாக்குச் சிறிதுகுறைவுபட்டிருந்தது. ஆதலாற்றான் நாயக்கர் சுயேச்சையாயிருக்கஎண்ணினார். மதுரையில் தன்வம்சத்தைநிலைநிறுத்தியசக்கரவர்த்திக்கடங்காமல் நாயக்கர்செய்தது தவறே. இவர்செய்ததை விஜயநகரத்தார் அறிந்திருந்தும் தமதுசக்திக்குறைவால் நாயக்கரை அச்சமயம் எதிர்க்காதிருந்தார். ஆகிலும் மதுரைநாயக்கமன்னர்களைப்போன்று சக்கரவர்த்திக்குட்பட்ட பலஅரசர்களில் ஒருவராகிய மைசூர்மன்னர் சம்பராஜஉடையார் ராஜபக்திமேலிட்டவராதலாலும், நாயக்கரின் தமையனாகிய முத்துவீரப்பநாயக்கர்காலமுதலே இவ்விரண்டுநாட்டிற்கும் பகை ஏற்பட்டிருந்ததாலும், அவர் நாயக்கரோடு போர்தொடங்கினர். இதுவே நாயக்கர் முதலில்தொடங்கியபோர்.

முதலில் மைசூர்ச்சேனை ஹாசூரநந்திராஜாவின் தலைமைக்குட் பட்டுப் பலகுன்றங்களைக்கடந்து கடைசியில், நாயக்கர்நாடாகிய சத்திய மங்கலம்தாலூகாவிலும் அதனைச்சுற்றியபாகங்களிலும் தங்கியது; பின்பு பையப்பையத் திண்டுக்கல்கோட்டையையும் வந்தெதிர்த்தது.

இதைக்கேட்ட நாயக்கர் அக்காலத்தில் தன்னாட்டில் மகாவீர னென்றுபேர்பெற்ற தளவாய்ராமப்பையரென்ற வேதியரின்தலைமை யின்கீழ் ஒருபெருஞ்சேனையை அனுப்பினார். அச்சேனையோடுசென்ற ராமப்பையர் திண்டுக்கல்லையெதிர்த்த மைசூர்ச்சேனையைமுறியடித்து விட்டார். விரோதிகள்பயந்து குதிங்கால் பிடரியிலடிக்க ஓரேஓட்ட மாய்த் தமதுநாடுநோக்கிச்சென்றனர். தளவாய் அச்சேனையைத் தொடர்ந்துசென்று மைசூரின்தலைநகரை முற்றுகையிட்டான். எதிரி கள் அவனது அஞ்சாமைக்கு அஞ்சிவிட்டனர். இதற்குள் நாயக்கர், தனதுதளவாயை உடனே மதுரைக்குத்திரும்பும்படி கட்டளையிட்டார். இவ்வாறு நாயக்கர்செய்ததற்குக்காரணம், தளவாயைப்பற்றிச் சிலர் தவறுகக்கொடுத்த அபிப்பிராயத்தைக்கேட்டதேயாம். இம்மட்டோடு மைசூர்முதற்சண்டைமுடிந்தது.

## சேதுநாடு.

இனிச் சேதுபதிகள்சம்பந்தமாய் நாயக்கரின் செய்கைகளைப் பார்ப்போம். நாயக்கர்காலத்திற் சேதுபதிகள் அவருக்குட்பட்டேயிருந் தனர். அக்காலத்துச் சேதுபதியாகிய சடையத்தேவர் தமது தத்துப் புத்திரனின்மகனுக்குப் பட்டஞ்சூட்டினார். அவர் காலகதியானதும், தம்பி என்பவர் தாம் இறந்தசேதுபதியின்பிள்ளையென்றுசொல்லிக் கொண்டும், நாடு தன்னைச்சேரவேண்டுமென்றும் நாயக்கரிடம் முறை யிட்டனர். அப்போது நாயக்கர் பெருஞ்சேனையொன்றைத் தம்பிவசம் அனுப்பினார். அப்போது நாடாண்ட தளவாய் சேதுபதி, தம்பியைத் தோற்கடித்துவிட்டார். அப்பால் நாயக்கர் சீற்றங்கொண்டு தண்டுடன், தனதுதளவாயை அனுப்பினார். அந்தணனைக்கண்டதும் சேதுபதி இராமேசுவரத்துக்குப்போய் அங்கொளித்துக்கொண்டார். அச்சமயம் ஏதோ ஒருவியாதியால் இராமப்பையர் திடீரெனஇறந்து நாயக்கர் நாட்டிற்குப் பெரியநஷ்டத்தை உண்டாக்கினார்.

ஆகிலும், அவருக்குப்பின்வந்ததளவாய், இராமேசுவரம் அடைந்து சேதுபதியைச் சிறைப்படுத்தி மதுரைக்குக்கொண்டுவந்தார்.

உடனே தம்பி சேதுபதி ஆயினர். தம்பி பலவீனராயிருந்தபடியால் சேதுநாட்டிற் கொலையும், களவுமே எங்கும் குடிகொண்டன. இராமேசுவரயாத்திரிகள் தங்கள் கஷ்டநஷ்டங்களை நாயக்கரிடம் தெரியப்படுத்தினுர்கள். நாயக்கர், தாமே அதற்குக்காரணஸ்தர் என அறிந்து சிறைப்படுத்தியசேதுபதியைச் சிறைநீக்கி முன்போல் நாட்டையாளும்படி அனுப்பினுர். அதுமுதற் சேதுநாடு சமாதானமாயிருந்தது.

## சக்கரவர்த்தியும் நாயக்கரும்.

இப்போது நாம்கூறும் யுத்தங்கள் நாயக்கரின் அழிவுக்குக் காரணமானவை. நாயக்கருக்கும் சக்கரவர்த்திக்குமிருந்தசம்பந்தத்தை முன்னரேகூறினேமன்றே? அச்சக்கரவர்த்திசிறிதுகாலத்துக்கெல்லாம் வலியுற்றுத் தென்னுட்டுச்சிற்றரசர்களைத் தண்டிக்க எண்ணினுர். அவர் முதலிற் செஞ்சிக்கோட்டையை எதிர்த்தார். நாயக்கர் செஞ்சி தஞ்சாவூர்நாயக்கர்களோடு சதியாலோசனைசெய்துகொண்டு சக்கரவர்த்தியின்சேனையைவெல்வதற்குப் பெருஞ்சேனையொன்றை அனுப்பினுர்.

ஆனுல் விஜயநகரத்தார் இதில் வெற்றியுற்றுர். நாயக்கரின் சேனை செஞ்சிச்சேனையோடுசேரமுடியாமல் விஜயநகரச்சேனைசெய்துவிட்டது. ஆகையால் நாயக்கரின் எண்ணம் முற்றுப்பெறவில்லை.

இவ்வாறு அபஜயமுற்றநாயக்கர் அவமானமடைந்து, தனக்கு உதவிசெய்யுமாறு கோலகோண்டாசுபேதாரின் உதவியைத்தேடினுர். அச்சுபேதரார் இது தனக்கு நல்லசமயமென்றெண்ணி, தனதுமுன்னைய விரோதியாகியசக்கரவர்த்திநாட்டை வடபால் எதிர்த்தார். தன்னுட்டைக்காப்பாற்றுவதற்காக விஜயநகரத்தார் தென்னுட்டினின்று நீங்கினுர். அவருக்கும், சுபேதாருக்கும் வெகுகாலம் சண்டைநடந்தது. ஆனுல் ஒருவருக்கும் வெற்றியுண்டாகவில்லை.

இதற்குள் முகம்மதியர் செஞ்சியைப்பிடித்துக்கொண்டு மதுரையை எதிர்த்தார்கள். தன் சிநேகிதனே தனக்குச்செய்தமோசத்தால் வருத்தமுற்று அச்சுபேதாருக்கு விரோதமாய்ப் பீஜப்பூர்ச்சுபேதாரிடம் உதவி வேண்டினர். பீஜப்பூரார் முதலில் மதுரைக்கு உதவிசெய்வதாய்ப் பாசாங்குசெய்து கடைசியில், தன்சேனையை முற்கூறிய சுபேதாரின்

மசேனையோடு சேர்த்துக்கொண்டு இருவருமாக மதுரையைத்தாக்கினார்கள். நமதுமுன்னோர்சொன்ன "முற்பகற்செய்யிற்பிற்பகல்விளையும்" "பிறர்க்கின்னாவித்திவினைவிளைப்பக்காண்டலிற், பித்துமுளவேர்பிற" என்றபழமொழிகள் நாயக்கருக்குப்பொருந்தின.

இச்சமயத்திற் பெருஞ்சேனையோடு சக்கரவர்த்திவந்து நாயக்கருக்கு உதவாவிட்டால் மதுரையை இந்தநிலையில் நாம் பார்க்கமுடியாது. சக்கரவர்த்தி எவ்வளவோ இச்சமயம் உதவிசெய்தாலும் நாயக்கரின் சேனைக்குள்ளேயே குழப்பமேற்பட்டிருந்ததால் அவருக்கு வெற்றியுண்டாகவில்லை. முடிவில் நாயக்கர் மிகுந்தபணத்தைச்செலவழித்ததோடு பிரதிவருஷமும் கப்பங்கட்டுவதாயொப்புக்கொண்டு பீஜப்பூர்ச்சேனையைச் சமாதானப்படுத்தினார்.

இதற்குள் விஜயநகரத்தாரும் தமது படைகளைத்திரட்டினார். அவர்க்கு மைசூர்மன்னர் வேண்டியஉதவிசெய்தார். அவ்வாறு உதவிய மைசூரரசனைக் கண்டிக்கும்படி நாயக்கர் பீஜப்பூர்ச் சுபேதாரை ஏவினர். அச்சுபேதார் மைசூரைச்சூறையாடியபிறகு, மதுரைக்குத்திரும்பிவந்து அதை நிர்மூலமாக்க ஆரம்பித்தார். உடனே நாயக்கர் அவருக்கு ஏராளமானபணத்தைக்கொடுத்து நல்லவார்த்தை சொல்லியனுப்பினார்.

இதுநடந்த சிறிதுகாலத்துக்கெல்லாம் தன்மேல் முகம்மதியரை நாயக்கர் ஏவியதற்காக மைசூர்மன்னர் பெருஞ்சேனையோடு மதுரையையெதிர்த்தார். நாயக்கரால் எக்காரியமும் முடியவில்லை. இறுதியில் அவர் சேதுபதிக்கு ஒருகடிதமெழுதுவித்துத் தமக்கு உதவிசெய்யுமாறுவேண்டினார். சேதுபதி தனக்கு நாயக்கர் முன்செய்ததீங்கை யெண்ணாது பெருஞ்சேனையுடன்வந்து மைசூர்ச்சேனையைத் தாராபுரம்வரை துரத்தித்துரத்தியடித்தார். அப்படிச்செய்த சேதுபதிக்குத் தன்னுடைய தந்தப்பல்லக்கையும் "திருமலைசேதுபதி"என்றபட்டத்தையும் திருச்சுழி, திருப்பூவணம், பள்ளிமடம் முதலியகிராமங்களையும் நாயக்கர்கொடுத்தார்.

பிறகு நாயக்கரின்தம்பியாகிய குமாரமுத்துநாயக்கர் தண்டெடுத்து மைசூருக்குப்போய் அவ்வரசனுடையமூக்கையறுத்துக்கொண்டு மதுரைக்குத்திரும்புமுன் நாயக்கரின் ஆட்சிமுடிந்தது.

நாயக்கர்நடத்தியசண்டைகளைப்பற்றிச் சிறிதுகூறுமலிருக்கமுடியவில்லை. முதலில் இம்மன்னன் தனதுசக்கரவர்த்திக்குவிரோதியானது பெருந்துரோகம். அதனினும் துரோகம் வேறில்லை. ஏனெனில் விஜயநகரத்துக்குட்பட்ட வேறு எந்தச் சிற்றரசர்களிலும் மதுரைநாயக்கர்களிடத்து அவர்கள் அதிக அன்புபாராட்டிவந்திருந்தார்கள். அதற்குக் காரணம் யானெழுதிய "விசுவநாதநாயக்கர்" என்னும் நூலிற்கண்டுகொள்க.

இவ்வாறு உதவிய விஜயநகரஅரசர்களிடத்து நாயக்கரின் முன்னோர்கள் எவ்வளவோ நன்றிசெலுத்தியிருக்க நாயக்கரும் அவர்களைப் போலவேநடந்திருக்கவேண்டுமன்றோ! இவ்வாறு செய்யாததோடு அவர்களுக்கு அடங்காமற் சுயேச்சையாய் அரசுபுரிந்ததே மிகவும் தாழ்ந்தசெய்கை. அதனினும் முகம்மதியர்களால் மனம்புண்பட்டிருக்கையில் அப்புண்ணிற் காய்ந்த ஊசிகொண்டுகுத்துவதுபோல் நாயக்கர் அச்சக்கரவர்த்தியை எதிர்த்ததுமன்றி, முகம்மதியரையும் அவர்களுடைய மற்றச்சிற்றரசர்களையும் அவர்களோடு போர்புரியத்தூண்டியது எவ்வளவோபேதைமையானகாரியம். இதனாலன்றோ, "தான்வெட்டிய குழியில் தானேவிழுதல்போல்" நாயக்கர் முகம்மதியர்க்குக் கப்பங்கட்டவேண்டியதாயிற்று. இதனாலன்றோ வெகுகாலமாய் இந்துக்களால் ஆளப்பட்டதென்னாடு முகம்மதியரின்கையிற்சிக்கவும், விஜயநகரராஜ்யம் அழியவும், மதுரையின்காசறை வறுமையுற்றதால் நாயக்கரின்பின் சந்ததிகள் விரோதிகளோடுபோர்புரிய ஏதுவில்லாமல் நாட்டைப் பிறரிடம் ஒப்புவிக்கவும்நேர்ந்தது. நாயக்கர்வமிசம் மதுரையில் வேரோடு தொலையவும் இதுவேகாரணம்.

நாயக்கர் இத்தகையகாரியங்கள் செய்திராவிட்டால் தக்ஷிணத்தின் சரித்திரம் இப்போதிருப்பதினும் மாறுபட்டிருக்குமன்றோ? இச்சண்டைகளன்றோ நாயக்கரின் முற்கூறியகட்டிடங்களாலாகியபெருமையையும் இனிநாம்படிக்கப்புகும் பெருமைகளையும் மங்கச்செய்தன! இந்த விஷயத்தைப்பெருக்கின் விரியுமாதலால் இதனைப்படிப்போரே இதைப்பற்றி ஆராய்ந்துகொள்க.

---

(தொடரும்.)

N. R. சுப்பிரமணியசர்மா,
தமிழ்ப்பண்டிதர், அமெரிக்கன் ஹைஸ்கூல், பசுமலை.